பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 16 ஞாயிற்றுக்கிழமை (30-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:217

# கிழக்கில் பதற்றத்தைத் தணிப்பதற்கு புலிகள் - படை அதிகாரிகள் சந்திப்பு

## நள்ளிரவு நீண்டநேரம் பேச்சு

மட்டக்களப்பு,ஜூன்30

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வன்செயல்களை அடுத்து உருவாகியிருக்கும் பதற்றநிலையைத் தணிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் படை அதிகாரிகளும் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.**

**வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் வெள்ளி நள்ளிரவு ஆரம்பமான கலந்துரையாடல் நேற்று அதிகாலை வரை நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இச்சந்திப்பில் இராணுவத் தரப்பில் கிழக்கு மாகாணக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், விடுதலைப் புலிகள் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு ஆகியோர் பங்குபற்றினர்.

பதற்றநிலையைத் தணிப்பது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாக நீண்டநேரம் ஆராய்ந்தனர்.

வன்செயல்கள் இடம்பெறாமல் தடுக்க இரு தரப்பினரும் கூட்டாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதென இணக்கம் கண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மீண்டும் வன்செயல்கள் எதிர்காலத்தில் ஏற்பட்டால் இரு தரப்பினரும் இணைந்து செயற்படுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை புலிகள் முற்றாக மறுத்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பொலீஸார் செயற்பட்டுள்ளனர் எனவும் புலிகள் குற்றஞ்சாட்டினர்.

ஹர்த்தால் ஏற்பாடு, பஸ் பயணிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், மூன்று கடைகள் எரிக்கப்பட்டமை மற்றும் கிரனேட் தாக்குதல் போன்ற வன்முறைச் சம்பவங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து அவற்றுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க முடியும். அவ்வாறு பின்னணியில் நின்று செயற்பட்டவர்களைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு, அம்பாறையில் ஊரடங்கு நீடிப்பு!

மட்டக்களப்பு,ஜூன்30

மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலும் நேற்றுக்காலை 10 மணிமுதல் மீண்டும் ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நேற்றுக் காலை 6 மணிக்கு நீக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் பதற்றமான நிலை நீடிப்பதை அடுத்து தளர்த்தப்பட்ட ஊரடங்கு மீண்டும் முற்பகல் 10 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இன்று முழுநாளும் ஊரடங்கு தொடரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ-3)

### வாழைச்சேனையில்

## தமிழர் வாழ்விடங்கள் சுடுகாடாகக் காட்சி!

மட்டக்களப்பு,ஜூன்30

வாழைச்சேனையில் தமிழ்மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு சுடுகாடுபோல் அந்த நகரம் காட்சியளிக்கின்றது.

அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுத் திரும்பியுள்ள செய்தியாளர் ஒருவர் இப்படி வர்ணித்தார்.

வாழைச்சேனையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சமாதான மாநாடு தொடர்பான செய்திகளைத் திரட்ட அங்கு சென்றிருந்த செய்தியாளரே இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழைச்சேனை நகரில் தமிழர்களின் 25 இற்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து கிடந்தன; 15இற்கும் மேற்பட்ட வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் செவ்வாயன்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

கிளிநொச்சி,ஜூன்30

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றத் தவறியதைக் கண்டித்தும் -

தீவுப்பகுதியில் புலிகளின் அரசியல்துறைப் பிரிவுப் போராளி தாக்கப்பட்டதை ஆட்சேபித்தும் -

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும்.

செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி நகரப் பகுதியில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அனைத்து ஊழியர்களையும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினர் பாடசாலை சமூகத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தக் கண்டனப் பேரணியில் வர்த்தகர்களும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்று வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறும் தினத்தில் வன்னிப் பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும் என்றும் ஏற்பாட்டாளர்கள் பொது மக்களிடம் கேட்டுள்ளனர். (ஐ-6)

### முச்சந்தி முரளி



...அப்ப வேலியே பயிரை மேய்ஞ்சிருக்கு...

## 500 குடும்பங்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பு,ஜூன்30

வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களை அடுத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

கறுவாக்கேணிப் பகுதிக்கு நூறு குடும்பங்களும் கண்ணன் கிராமம், பேய்த்தாழை ஆகிய பகுதிகளுக்கு 400குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் பகல் நேரங்களில் தமது வீடுகளுக்குச் சென்று நிலைமைகளை அவதானிப்பதாகவும் -

இரவில் வேறு இடங்களில் தங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு பொது அமைப்புக்கள் உதவிகளை வழங்கி வருகின்றன. (ஐ-3)

### வேலணை தாக்குதல் சம்பவம்:

## சுயாதீன ஆணைக் குழுவுக்கு புலிகளின் பிரதிநிதியாக சிவஞானம்



கொழும்பு,ஜூன்30

விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் செம்மணன், உறுப்பினர் தயாளன் ஆகியோர் வேலணையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த அரசு நியமிக்கவுள்ள சுயாதீன ஆணைக்குழுவுக்கான தமது தரப்பு உறுப்பினராக யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை விடுதலைப் புலிகள் சிபார்சு செய்துள்ளனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையக அதிகாரி இத்தகவலை வெளியிட்டுள்ளார். வேலணைச் சம்பவம் தொடர்பாக பக்கசார்பற்ற முறையில் விசாரணை நடத்த சுயாதீன ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசுக்குச் சிபார்சு செய்திருந்தது.

இதை ஏற்றுக்கொண்ட பிரதமர் ரணில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை சம்பவங்களுக்கு பொலீஸாரே முழுப்பொறுப்பு!

### மட்டு. எம்.பிக்கள் பிரதமருக்குக் கடிதம்

கொழும்பு,ஜூன்30

வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் அனைத்திற்குமான முழுப்பொறுப்பை பொலீஸாரே ஏற்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட பொலீஸாரை உடனடியாக இடமாற்றம் செய்க.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், எஸ். தங்கவடிவேல் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாழைச்சேனை நகரில் அழிவுக்குள்ளான பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட மேற்படி எம்.பிக்கள் இருவரும் நேற்று பிரதமருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தனர். இந்தக் கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயலைத் தடுக்கத் தவறிய பொலீஸார் மீது நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜூன்30

வன்செயல்களைத் தடுக்கத் தவறிய பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலீஸ் மா அதிபர் ஆர். ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த சமாதான மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழைச்சேனைப் பகுதியில் வனசெயல் சம்பவங்கள் அதிகரிப்பதற்கு பொலீஸார் நடவடிக்கை எடுக்காததே காரணம் என்று அப்பகுதி மக்கள் முறையிட்டனர்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதிப் பொலீஸ்மா அதிபர் இப்படிக் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் வன்செயல் வெடிக்க அனுமதிக்கப் போவதில்லை!

### பிரதமர் ரணில் உறுதிமொழி

கொழும்பு,ஜூன்30

கிழக்கில் மீண்டும் வன்செயல்கள் வெடிக்க இடமளிக்கப்போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுடன் நேற்றுக் கலந்துரையாடிய சமயமே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

கிழக்கில் இடம்பெறும் சம்பவங்களின் விவரங்களை உடனுக்குடன் அங்கிருந்து பெற்று வருகின்றேன். நிலைமையை மிக உன்னிப்பாக அவதானித்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

மீண்டும் ஒரு வன்செயல் இடம்பெற அனுமதிக்கமாட்டேன். பூரண பாதுகாப்பு வழங்கும்படி பணித்துள்ளேன்.

சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. குற்றவாளிகளாக இனங்காணப்படுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும்.

- இப்படிப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடமராட்சி, தென்மராட்சி வலயங்களின்

# 40 பாடசாலைகளில் புத்தாக்குநர் கழகங்கள்

வடமராட்சிகிழக்கு,ஜூன்30

வடமராட்சி, தென்மராட்சி வலயங்களைச் சேர்ந்த 40 பாடசாலைகளில் புத்தாக்குநர்கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்புத்தாக்குநர் கழகங்களை அமைப்பதற்கான கூட்டம் கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புத்தாக்குநர் ஆணைக்குழுவின் அதிகாரிகள் வடக்குக் கிழக்கு மாகாணசபை அதிகாரிகள், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோா கலந்துகொண்டார்கள்.

வடமராட்சி வலயத்தில் புத்தாக்குநர் கழகத்தின் மூன்று தொடர் பாடல் மத்திய நிலையங்களும், தென மராட்சி வலயத்தில் மூன்று தொடர் பாடல் நிலையங்களும் அன்று அமைக்கப்பட்டன.

அத்துடன் புத்தாக்குநர் கழகங்கள் அமைக்கப்பட்ட 40 பாடசாலைகளுக்கும் புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் 40 புத்தகத் தொகுதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. பாடசாலை மட்டத்தில் இளம் கண்டு பிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவே இக்கழகங்கள் அமைக்கப்படுகின்றன.

தெற்கில் ஏற்கனவே பாடசாலைகளில் இத்தகைய கழகங்கள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

(ம-182)

## சுற்றுலாப் பயணிகள் வருகை கஜூரினா 'பீச்'சில் அதிகரிப்பு!

### கோஷ்டி மோதல்களும் அங்கு தாராளம்

யாழ்ப்பாணம்,ஜூன்30

காரைநகர் கஜூரினா 'பீச்'க்கு சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாக என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ஏராளமான சிங்கள முஸ்லிம் மக்களின் சுற்றுலா மையமாக கஜூரினா பீச் மாறி வருவதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் குடநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த இளைஞர் குழுக்களும் கடந்த சில மாதங்களாக பெருமளவில் அங்கு படையெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு சுற்றுலா செல்பவர்கள் அங்கு தாராளமாகக் குடித்துவிட்டுக் கும்மாளம் அடிப்பதுடன் தகாத செயல்களிலும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அங்கு தினமும் கோஷ்டி மோதல்களும் தாராளமாக இடம்பெற்று வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய கிராமசேவகருக்குப் பிடியாணை

வலி.வடக்கு,ஜூன்30

நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணையை ஏற்று நீதிமன்றம் வரத் தவறிய கிராம அலுவலரைப் பிடித்து நீதிமன்றின் முன் ஆஜர் செய்யும்படி பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் அனுப்பப்பட்ட அழைப்பாணை யின் பிரகாரம் சமுகமளிக்காமல் நீதிமன்றத்தை உதாசீனம் செய்தமைக்காகவே மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் மேற்படி பிடியாணையைப் பிறப்பித்துள்ளார்.(ம-86)

## அச்சுவேலி தெற்கில்

# திருடர்கோஷ்டி அட்டகாசம் இரவில் அச்சத்துடன் மக்கள்

அச்சுவேலி,ஜூன்30

அச்சுவேலி தெற்குப் பகுதியில் இரவு வேளையில் திருடர்குழு அட்டகாசம் செய்வதால் பொதுமக்கள் அச்சத்துடன் இரவுப் பொழுதைப் போக்க வேண்டி இருப்பதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் இல்லத்தில் யன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே புகமுயன்ற திருடர்குழு முயற்சி கைகூடாததை அடுத்து தப்பிச்சென்றுள்ளது. அதேவீதியில் வேறுறொரு வீட்டினுள் புகுந்த திருடர்கள் குடும்பப்பெண் அணிந்திருந்த சங்கிலியின் ஒரு பகுதியை அறுத்துக்கொண்டு ஓடித்தப்பியுள்ளனர்.

அதேதினம் தச்சன்தோட்டப் பகுதியில் வசிக்கும் ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒருவரின் வீட்டில் யன்னல் கம்பிகளை வளைத்துக்கொண்டு வீட்டினுள் நுழைய முயன்ற திருடர்கள் முயற்சி கைகூடாததை அடுத்து தப்பிச்சென்றுள்ளனர்.

பயிற்றோலைப் பகுதியில் உள்ள வீட்டினுள் புகுந்து திருடமுயன்ற திருடர்கள் அங்கு இடம்பெற்ற களேபரத்தை அடுத்து தாம் ஏற்கனவே திருடிக்கொண்டு வந்த ஆட்டுக்கடாவை அந்த வீட்டில் கைவிட்டு விட்டுத் ஓடித்தப்பியுள்ளனர்.

அச்சுவேலி தெற்கு பிரப்பங்குளம் பகுதியில் வசிக்கும் கிராம சேவையாளர் ஒருவரின் இல்லத்தில் யன்னல் கம்பி ஊடாக உடுபுடைவைகளும் மூன்றரைப் பவுண் கைச்சங்கிலியும் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

அச்சுவேலி சிவசக்தி கோயில் பகுதியில் உள்ள வீடொன்றில் புகைபோக்கியில் வெளிச்சத்திற்கு வைக்கப்பட்டுள்ள துவாரப் பகுதியூடாக உள் நுழைந்த திருடர்கள் கையில் அகப்பட்ட சிறுதொகைப் பணத்துடன் ஓடித்தபபியுள்ளனர். (எ-11)

## சமய சந்நிதிகளில்

அரியாலை,ஜூன்30

ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'இந்து மதம் எங்கே செல்கிறது?' என்னும் பொருளில் முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார். (எ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்30

கோப்பாய் வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பு.மு. பரமசாமிக் குருக்கள் நிகழ்த்துவார்.(எ-72)

## அமைச்சர் ஜயலத் ஜெயலலிதாவை சந்தித்துப் பேச்சு

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசுகையில் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து சென்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்துவரும் 60 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகளை மீள இலங்கையில் குடியமர்த்துவது தொடர்பாக இந்தப் பேச்சுக்களின்போது முக்கியமாக ஆராயப்பட்டதாக அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

(ம-12-4)

## சேவைகள் வழமைக்கு திரும்பின

வடமராட்சி,ஜூன்30

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் ஒருநாள் வேலை நிறுத்தத்துடன் கடந்த வியாழன் முதல் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு கடமைகளுக்குத் திரும்பினர்.

ஊழியர்களைத் தாக்கியோரை விரைவாக கைது செய்து நடவடிக்கை எடுப்பதாக பருத்தித்துறைப் பொலீஸாரும் -

தாக்குதல் சம்பவம் குறித்து தாமும் விசாரணைகளை மேற்கொளவதாக விடுதலைப் புலிகளும் - தெரிவித்ததையடுத்தும் பயணிகளின் போக்குவரத்துக் கஷ்டங்களை உணர்ந்தும் தாம் கடமைக்குத் திரும்புவதாக பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதையடுத்து பருத்தித்துறை டிப்போ பஸ் சேவைகள் யாவும் வழமைக்குத் திரும்பின.

(ம-173)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்30

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் தனது 50ஆவது வருட நிறைவையொட்டி நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நவாலி சென்பீற்றர்ஸ் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் வி.கவும் சுன்னாகம் ஸ்கந்தா வி.கவும் மோதுகின்றன. (எ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்30

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சிக்கழக மைதானத்தில் நடைபெறும் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் கொக்குவில் காந்திஜி வி.கவும் உடுவில் உதய சூரியன் வி.கவும் பங்குபற்றுகின்றன.

(எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்30

வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் மு.முரளிதரன் தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

## சித்திரப் போட்டியும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,ஜூன்30

மாகாணக் கல்வியமைச்சின் ஆரம்பக் கல்விப் பிரிவினால் வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கற்கின்ற ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களுக்கு சிறுவர் சித்திரப் போட்டியும் கண்காட்சியும் விரைவில் நடத்தப்படவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகள் தரம் 1-2 ஒரு பிரிவாகவும், தரம் 3-4 அடுத்த பிரிவாகவும், தரம் 5 மூன்றாவது பிரிவாகவும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று ஐந்து வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன் அரச அல்லது அரச அனுமதிபெற்ற பாடசாலைகளில் கல்வி கற்பவர்களாக இருக்க வேண்டும்.

மேலதிக விவரங்கள் யாவும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-10)

## ஜப்பான் தென்கொரியா உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.2002 - 30.06.2002



விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம். எனினும் தோல்விகள் தாங்கமுடியாதவையே. நேற்றைய ஆட்டத்தில் தோல்வியுற்ற தென்கொரிய அணி வீரர் லீ சுங் - சூ மைதானத்தில் நடுவே இருந்து அழுவதையும் துருக்கிய வீரர் கொஹ்மாஸ் அவரைத் தேற்றுவதையும் படத்தில் காணலாம்.

# வரலாறு படைக்காமலே வெளியேறியது கொரியா!

சியோல்,ஜூன்30

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறுகின்றது. நேற்று நடந்த மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் துருக்கி அணி வென்று மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. 3-2 என்ற கோல் அடிப்படையில் அது தென்கொரியாவை வென்றது.

நேற்றைய ஆட்டம் கோலுடனேயே ஆரம்பமானது. ஆம்! ஆட்டம் ஆரம்பித்த முதலாவது நிமிடத்திலேயே துருக்கிய வீரர் ஹகன் சுஹர் முதலாவது கோலை அடித்தார். உலகக் கிண்ண வரலாற்றில் மிக வேகமாக அடிக்கப்பட்ட கோல் இது. பந்தைத் தட்டி ஆட்டம் ஆரம்பமான உடனேயே மிகமிக விரைவாக முன்னேறிய துருக்கிய வீரர்கள், தென்கொரிய தடுப்பாளர்கள் சுதாகரித்துக்கொள்வதற்கு முன்பே கோல் அடித்தனர்.

ஆனால், அவர்களுக்கு தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்று நிரூபிக்கும் விதத்தில் ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்தில் தென்கொரியாவுக்குக் கிடைத்த கட்டுப்பாடற்ற உதையைச் சரியாகப் பயன்படுத்திய வீரர் உல்-ஜுங் ஒரு கோலை அடித்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அடுத்த 4 நிமிடங்களில் - ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் - துருக்கிய வீரர் இல்ஹான் மன்ஸிஸ் அபாரமாக ஆடி அணியின் இரண்டாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். மீண்டும் 32ஆவது நிமிடத்தில் அவர் தனது இரண்டாவது கோலையும் அணியின் மூன்றாவது கோலையும் அடித்து அணியின் நிலையைப் பலப்படுத்தினார்.

தென்கொரிய அணியின் பயிற்சியாளர் தனது அணியின் வழமையான பாணியை மாற்றி, தற்காப்பு ஆட்டத்திலும் பார்க்க முன்னேறித் தாக்கும் உத்திக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தமையே துருக்கிய வீரர்கள் இலகுவாக கோல் அடிப்பதற்கு ஏதுவாக அமைந்தது என்று விமர்சிக்கப்படுகின்றது.

முன்பாதி ஆட்டம் 3-1 என்ற நிலையில் முடிவடைந்தது. துருக்கியின் இந்த முன்னணி நிலை தென்கொரியர்களுக்குப் பெரும் அழுத்தமாக அமைந்தது.

பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த பின்னர் தென்கொரியர்கள் மீண்டும் முன்னேறித் தாக்குவதில் தீவிரம் காட்டினர். தமது சொந்த மண்ணில் நடைபெறும் போட்டியில் மூன்றாவது இடத்தையாவது பெற்றுவிடவேண்டும் என்ற வெறியில் அவர்கள் ஆடினர்.

துருக்கிய கோல் கம்பங்களை முற்றுகையிட்டு அவர்களது தற்காப்பு அரணை உடைப்பதில் அவர்கள் தீவிரமாக இருந்தபோதும் அவர்களால் துருக்கியத் தடுப்பாளர்களைத் தாண்டி முன்னேறமுடியவில்லை.

தமது அணி பலமான ஒரு நிலையை அடைந்ததைத் தொடர்ந்து தென்கொரியர்களின் கோல் அடிக்கும் முயற்சிகளை முறியடிப்பதிலேயே துருக்கி அதிக அக்கறை காட்டியது. இதனால் பின்பாதி ஆட்டத்தில் அதிகநேரம் பந்து துருக்கிய கோல் கம்பங்களின் பக்கமே இருந்தது. ஆனாலும் தென்கொரியர்களால் துருக்கிய தடுப்பரணைத் தாண்டி உள் நுழைந்து கோல் அடிக்கமுடியவில்லை. இதனையடுத்து, கோல் கம்பங்களில் இருந்து நீண்டதூரங்களில் இருந்தே இலக்கு நோக்கி பந்தை வேகமாக உதைய ஆரம்பித்தனர் தென்கொரிய வீரர்கள். இவ்வாறு உதையப்பட்ட பந்துகளை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தினார் துருக்கிய கோல்காப்பாளர் ரெஸ்டு ரெக்பர்.

ஆட்டம் முடிவுறும் தறுவாயில் - ஆட்டத்தின் 90ஆவது நிமிடத்தில் - தென்கொரிய வீரர் சொங் சோங்-ஹு" கோல் கம்பத்தின் இடதுபக்கமாக பெனால்டிப் பகுதிக்கு வெளியே இருந்து மிக வேகமாக உதைத்த பந்து கோல் கம்பத்தின் இடதுபுற மூலைவழியாக உள்நுழைந்து கோலானது. இறுதியில் 2-3 என்ற கோல் அடிப்படையில் தென்கொரியா துருக்கியிடம் தோற்றது.

தமது சொந்த நாட்டில் இடம்பெற்ற போட்டியில் மூன்றாம் இடத்தைக் கூடப் பெறமுடியாமல் போனமையால் தென்கொரியா முழுவதும் கண்ணீர்க் கடலில் மூழ்கிப்போனது. (ம)

# வட-தென்கொரியாக்களின் போர்க் கப்பல்களிடையே சமர்!

லண்டன்,ஜூன்30

வடகொரியா மற்றும் தென்கொரியாவின் போர்க்கப்பல்கள் மேற்குக் கடலோரப் பகுதியில் மோதலில் நேற்று ஈடுபட்டன. இந்தச் சமரையடுத்து அப்பகுதியில் மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்த படகுகள் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றன.

மஞ்சள் கடலின் யெனோபியவ் தீவருகே உள்ள கடற்பகுதியில் சுமார் 20நிமிடங்கள் நீடித்த இந்தச் சமரில் 20 தென்கொரியர்கள் காயமடைந்ததாகவும் -

வடகொரிய போர்க்கப்பல் தீப்பற்றியெரியும் நிலையில் அப்பகுதியிலிருந்து சென்றதாவும் -

கூறப்படுகிறது.

மோதலில் ஈடுபட்ட வடகொரிய போர்ப்படகுகளில் ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் -

அதிலிருந்த 30 பேரும் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கக் கூடும் என்று நம்பப்படுவதாகவும் -

தென்கொரிய கடற்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக கடல் எல்லையை மீறி தென்கொரிய கடற்பரப்புக்குள் வடகொரிய போர்க்கப்பல்கள் பல தடவைகள் பிரவேசித்ததைத் தொடர்ந்தே தற்போதைய மோதல் சம்பவம் இடம்பெற்றதாக தென்கொரியா கூறுகிறது.

1953ஆம் ஆண்டு இடம்பெற்ற வட-தென் கொரியாக்களிடையேயான கொரிய யுத்தத்தின் பின்னர் இரு கொரியாக்களுக்கும் இடையே முதல் தடவையாக கடற்படைப்போர் மூன்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

உலக அரங்கில்

# ஆர்ஜென்ரீனாவில் பொலீஸ் அத்துமீறல்!



ஆர்ஜென்ரீனப் பொலீஸாரின் அத்துமீறலைக் காட்டும் புகைப் படங்களில் ஒன்று. விழுந்து கிடப்பவருக்கு உதவியவரை பொலீஸார் அடித்து இழுப்பதைப் படத்திற் காணலாம்.

போனர்ஸ்அயர்ஸ்,ஜூன்30

ஆர்ஜென்ரீனாவில் கடந்த புதன்கிழமை அரசுக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தமை தொடர்பாக தலைநகர் போனர் அயர்ஸின் பொலீஸ் துறைத் தலைவர் ரிகாட்டோ டெகஸ் ரஸ்டி பதவி விலகியுள்ளார்.

நாட்டின் பொருளாதார சீகுலைவை சீர்செய்யத் தவறியதாக அரசு மீது குற்றஞ்சாட்டி ஆயிரக்கணக்கானவர்கள் தலைநகர் போனர்ஸ்அயர்ஸில் கடந்த புதன்கிழமை பேரணி நடத்தினர்.

அந்தச் சமயத்தில் பேரணியை தடுத்து நிறுத்திய பொலீஸார் கண்மூடித்தனமாகச் சுட்டதாகவும் -

அதில் காயமடைந்த ஒருவருக்கு அருகில் இருந்த ரயில் நிலையத்தில் வைத்து அவரது நண்பர்கள் முதலுதவி செய்தபோது அங்கு வந்த பொலீஸார் முதலுதவி செய்தவர்களையும் சுட்டதாகவும் - கூறப்படுகிறது.

பொலீஸாரின் அத்துமீறல்களை உறுதிப்படுத்தும் வகையிலான 8 புகைப் படங்களை 'கிளாரின்' என்ற பத்திரிகை வெளியிட்டது. இதனையடுத்து பொலீஸாருக்கு எதிரான கண்டனங்கள் எழுந்துள்ளன. மேற்படி அத்துமீறல்கள் தொடர்பாக இரண்டு பொலீஸார் கைது செய்யப்பட்டதுடன், நூற்றுக்கும் மேற்பட்ட பொலீஸார் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (ஒ-8)

# இஸ்ரேலைக் கலக்கும் பலஸ்தீனப் புகைப்படம்

பலஸ்தீன 'ஹமாஸ்' இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதலாளிகள் பயன்படுத்தும் 'தற்கொலைக் குண்டு'களை ஏந்தியபடி தோன்றும் புகைப் படங்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. ஆனால், கைக் குழந்தை ஒன்று




உடையை அணிந்துள்ள சிசு ஒன்றின் படம் இஸ்ரேலை பெரும் அதிர்சசிக்குள்ளாகியுள்ளது.

மேற்குக் கரை நகரான ஹெப்ரோனில் தாம் நடத்திய சோதனையில், ஒரு பலஸ்தீனக் குடும்பத்தின் புகைபட 'அல்பத்திலிருந்து இந்தப் புகைப் படத்தை கைப்பற்றியதாகக் கூறி இஸ்ரேலிய இராணுவம் அதனை வெளியிட்டது.

பலஸ்தீனச் சிறுவர்கள் பலஸ்தீனத் தீவிரவாதிகள் போன்று உடையணிந்து விளையாட்டுத் துப்பாக்கி தற்கொலைக் குண்டுதாரியின் உடையில் தோன்றும் இந்தப் புகைப்படம் இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரத்தை பெரிதும் கலக்கியடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேல் எவ்வளவுதான் இராணுவ நடவடிக்கைகள் மூலம் பலஸ்தீனர்களை அடக்கிவிட எண்ணினாலும் பலஸ்தீனர்களின் போராட்ட உணர்ச்சியை சிறிதும் குறைத்துவிட முடியாது என்பதையே இந்தப் புகைப்படம் உறுதிப்படுத்துவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.(ஒ-8)

# பலஸ்தீனத் தலைமையகத்தின் ஒருபகுதி தரைமட்டமானது!

## இஸ்ரேலிய இராணுவம் தகர்த்தது

லண்டன்,ஜூன்30

மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் உள்ள பலஸ்தீன அதிகார சபையின் உள்ளூர் தலைமையகத்தை இஸ்ரேலியப் படையினர் தகர்த்து விட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தலைமையகக் கட்டடத்தின் பெரும்பகுதி தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. தம்மால் தேடப்பட்டு வரும் பலஸ்தீனத் தீவிரவாதிகளில் முக்கியமான 15பேர் இந்தக் கட்டடத்துக்குள் மறைந்திருப்பதாகக் கூறி அக்கட்டடத்தை கடந்த சில தினங்களாக முற்றுகையிட்டிருந்த இஸ்ரேலியப் படையினர் நேற்று கட்டடத்தைத் தகர்த்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கட்டடத்துக்குள் இருந்த பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகவும் -


நேற்று தொடர்ந்து கேட்ட பாரிய வெடிச்சத்தங்களையடுத்து கட்டடத்தின் ஒருபகுதி தகர்ந்து விழுந்ததாகவும் -

கூறப்பட்டது.

கட்டடம் தகர்க்கப்படுவதற்கு முன்னர், அப்பகுதியில் இஸ்ரேலியப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் எவராவது கைது செய்யப்பட்டார்களா? என்பது குறித்த விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

நான்கு மாடிகளைக் கொண்ட குறிப்பிட்ட கட்டடத்தில் அதிகாலை வேளையில் பலத்த வெடிச்சத்தம் மற்றும் தீப்பிழம்புகள் உருவானதையடுத்து அதன் ஒருபகுதி இடிந்து விழுந்ததாக நேரில் கண்டவர்கள் கூறியதாகச் சுயாதீன செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

தகர்க்கப்பட்ட கட்டடம்



ஆனால் தலைமையகக் கட்டடத்தின் சேதமடையாத பகுதிக்குள் பலஸ்தீன ஆயுததாரிகள் இன்னமும் மறைந்துள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

இதேசமயம், மேற்படி தலைமையக முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாக பலஸ்தீன அதிகாரி தலால் சித்ர் என்பவரை இஸ்ரேலிய இராணுவம் கட்டடத்துக்குள் உள்ளதாகக் கூறப்படும் பலஸ்தீனத் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்த அனுப்பினார்கள். ஆனால் உள்ளே சென்று திரும்பிவந்த சித்ர், கட்டடத்தின் உள்ளே பேசுவதற்கு எவரும் கிடையாது என்று தெரிவித்துள்ளார். சேதமடைந்த கட்டடத்துக்குள் இருப்பவர்களை தன்னால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஹெப்ரான் நகருக்குள் நுழைந்த இஸ்ரேலியப் படையினர் உள்ளூர்த் தலைமையகத்தை முற்றுகையிட்டனர். அப்போது கட்டடத்துக்குள் தஞ்சமடைந்திருந்த பலஸ்தீனர்கள் இருபது பேர் இஸ்ரேலியப் படையிடம் சரணடைந்தனர். ஆனால், 15 தீவிரவாதிகள் அந்தக் கட்டடத்துக்குள் உள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் கூறிவருகின்றனர். (ஒ-8)

# 2 சீக்கிய அமைப்புகளுக்கு அமெரிக்காவில் தடை விதிப்பு!

வாஷிங்ரன்,ஜூன்30

அமெரிக்காவில் செயற்பட்டுவந்த 'பாபர் கல்சா' மற்றும் 'சீக்கிய இளைஞர் கூட்டமைப்பு' ஆகிய இரு அமைப்புக்களுக்கும் அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவின் மூலம் இவ்வமைப்புக்களுக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் முடக்கிவைக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் உள்ளதாக இந்தியா கருதும் தீவிரவாதிகளில் இந்த இரு அமைப்புகளின் தலைவர்களும் அடங்குவர். இவர்கள் உட்பட 20 தீவிரவாதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை பாகிஸ்தானிடம் கையளித்துள்ள இந்தியா, அவர்களை தனனிடம் ஒப்படைக்கவும் கோரியது. இதனை அமெரிக்காவும் ஆமோதித்திருந்தது. இந்த நிலையிலேயே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-8)

# ஒரு லட்சம் பேர் பங்கேற்ற விருந்து!

ஹொங்கொங்சிற்றி,ஜூன்30

ஹொங்கொங்கில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் ஒரே இடத்தில் கூடி காலை உணவை உண்டனர்.

மாணவர்கள் மத்தியில் காலை உணவின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதும் உலக சாதனை படைப்பதுமே இம்மாணவர்களின் நோக்கமாக இருந்தது.

இந்நிகழ்வில் 140 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9-12)

# தலைவராக தமிழர் இருக்க பா.ஜ.கவினர் கடும் எதிர்ப்பு!

## அதனால் ஜனா கிருஷ்ணமூர்த்தி ராஜினாமா

புதுடில்லி,ஜூன்30

இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராகப் பதவி வகித்து வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜனா கிருஷ்ணமூர்த்தி நேற்றுமுன்தினம் இரவு திடீரென்று தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். தமிழர்-ஒருவரின் தலைமையின் கீழ் செயறபட பாரதிய ஜனதாவின் வடஇந்தியத தலைவர்கள் மறுத்ததால் ஆத்திரமுற்றே அவர் பதவி விலகியதாகக் கூறப்படுகிறது.

மத்திய அமைச்சரவையை மாற்றியமைத்து தோழமைக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க பிரதமர் வாஜ்பாய் திட்டமிட்டுள்ளார்.

இதற்கு வசதியாக பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் சிலரை பதவி விலகுமாறு பிரதமர் வாஜ்பாய் கேட்டிருந்ததாகவும் -

சமீபத்தில் நடந்த தேர்தல்களில் பாரதிய ஜனதா தோல்வியடைந்த மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களை, அவர்களது பதவிகளில் இருந்து



விலகி சொந்த மாநிலங்களில் கட்சியை வளர்க்கும் பணிகளில் ஈடுபடுமாறு பிரதமர் அவர்களைக் கோரியிருந்ததாகவும் -

பா.ஜ.க.வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமரின் கோரிக்கையை ஏற்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்த பா.ஜ.கவின் வடஇந்திய அமைச்சர்கள் சிலர் தமிழரான ஜனா கிருஷ்ணமூர்த்தியின் தலைமையின் கீழ் தம்மால் செயற்பட முடியாதென்று பிரதமரிடம் கூறியதாகத் தெரிய வருகிறது. இதனால் ஆத்திரமடைந்தே ஜனா கிருஷ்ணமூர்த்தி தலைவர் பதவியை ராஜினாமா செய்ததாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் துணைப் பிரதமர் பதவியை ஏற்படுத்தி அதனை ஜனா கிருஷ்ணமூர்த்திக்கு வழங்கி அவரைச் சமாதானப் படுத்தும் திட்டம் ஒன்று ஆலோசிக்கப்பட்டதாகவும் -

அதற்கும் எதிர்ப்புத் தெரிவித்த வடஇந்தியத் தலைவர்கள் துணைப் பிரதமர் பதவிக்கு உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானியின் பெயரை சிபாரிசு செய்துள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

# தேர்வில் தோற்ற மாணவன் ஆசிரியையைக் கொன்றார்!

## பிலிப்பைன்ஸில் சம்பவம்

மணிலா,ஜூன்30

பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தன்னைத் தேர்வில் தோல்வியடையச் செய்ததற்காக பெண் விரிவுரையாளர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளார்.

பிலிப்பைன்ஸில் கபகான் என்ற இடத்தில் உள்ள மின்டானோ பல்கலைக்கழகத்தில் வேளாண் பொருளாதாரப் பிரிவில் கல்வி பயிலும் மூன்றாம் வருட மாணவன் ஜோசப் மகனகா ஒரு பாடத்தில் சித்திபெறவில்லை. தான் அந்தப் பாடத்தில் சித்தி பெறாததற்கு அந்தப் பாட விடைத்தாளைத் திருத்திய விரிவுரையாளரே காரணம் என மானகா எண்ணினார். இதனால் ஆத்திரமடைந்த அவன், எல்விரா ரெண்டன என்ற அந்த விரிவுரையாளரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார்.

விரிவுரையாளர் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பின்தொடர்ந்த ஜோசப் மகனகா அவரின் முதுகில் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகவும் -

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த விரிவுரையாளர் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் உயிரிழந்ததாகவும் - பிலிப்பைன்ஸ் பொலீஸார் தெரிவித்தனர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியில் 43 பரப்பு தோட்டநிலம் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.கா.சாந்திநாதன், நந்தாவில் அம்மன் வீதி, கோண்டாவில் மேற்கு. (5219)

நல்ல நிலையில் உள்ள சிவப்பு நிற CD 200 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வே.பத்மநாதன், நவாலி தெற்கு, மானிப்பாய். (5365)

2 மாதம் நிரம்பிய, பூச்சி நீக்கப்பட்ட டசோன் (DASHOUND) நாய்க் குட்டிகள், மணித்தாராக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (5344)

லயன்கட் பொமனேரியன், ஒரு வயதுடைய ஆண் நாய், நாலு மாதம் நிறைந்த பொமனேரியன் குட்டியும், கொங்கோறம், பொங்கஸ் வாத்தியக் கருவியும், Jiansne (J.S.50) மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.பேபி, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் தெற்கு. (5294)

நல்ல இன Dobermann Pincher ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5350)

7 நாள் நிரம்பிய Broiler குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் Broiler குஞ்சுகள் கொள்வனவு செய்வோரிடம் மட்டும் திரும்ப இறைச்சிக் கோழிகள் பெற்றுக்கொள்வோம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5348)

ஆபிரிக்க லவ்பேட்ஸ், ஜாவாப் பரட், விஞ்சேஸ் குருவிகள், பல இனங்களில் கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மோட்டர்கள், மீன்தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (5293)

அரியாலையில் கண்டி றோட்டிலிருந்து 1/2 மைல் தூரத்தில் மிகத் திறமையான விளைச்சலுள்ள 80பரப்பு நெற்காணி(புளியடிவயல்) உடன் விற்பனைக்கு உண்டு. இதற்கான வரைபடம், உறுதி என்பன கைவசம உண்டு. தொடர்பு: 56, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது P.பாஸ்கரன் 19, 3/7, மிலாகிரிய அவென்யூ, பம்பலப்பிட்டி, கொழும்பு. தொலைபேசி: 503483 (5391)

## மருந்துகள் விற்பனைக்கு

ஆடு, மாடு, கோழிகள், நாய்களுக்குரிய சகல மருந்து வகைகளும் விற்பனைக்கு உண்டு. Calciveyxol (M.F.C), Raniket, Gambora, Parro, Distember ஊசி மருந்துகளும் உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (5351)

## கார் விற்பனைக்கு

18-XXXX தொடர் இலக்கமுடைய Brand New (புதிய) சொகுசு கார் விற்பனைக்கு உண்டு. பெற்றோலிலும், காஸ் (LP Gas) இலும் ஓடக்கூடியது. அத்துடன் டாக்டரின் பாவனையில் உள்ளது. தொடர்பு: 18/10, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (முன்னைய ஈழநாதம் காரியாலயம் முன்பாக). (5359)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில், கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகில் மாவட்ட நீதிமன்றினால் பிறிவிடுதல் செய்யப்பட்ட வீடு (இரண்டு கிணற்றுடன்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி விஜய லட்சுமி இராஜலிங்கம், இராச வீதி, தோப்பு, அச்சுவேலி. (5394)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (5346)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள விற்பனைக்கு உண்டு. எல்லா நாள்களிலும் வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (5397)

## தவறிவிட்டது

வீரபத்திரர் கோயிலடி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் தர்மசீலன் என்பவருடைய தே.அ.அ.(இல. 763624439V), விசேட அ.அ. (இல. 0905003543) என்பன யாழ்ப்பாணத்துக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் அல்லது சு.செல்வராசா, சண்டிலிப்பாய் கிழக்கு, சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானமாக ரூபா 1000/= வழங்கப்படும். (5369)

கைலாசபிள்ளை வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த சபாபதி மல்லிகா என்பவருடைய தாலிக்கொடி ஒன்று 28.06.2002 அன்று சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் 'அசம்பிளி of கோட' இர்கும் இடையில் தவறிவிட்டது. கணெடுத்தவர்கள் 'ராசம் தொலைத் தொடர்பு நிலையம், சாவகச்சேரி' எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5388)

## இன்று வியாழ மாற்றம்

இன்று வாக்கிய பஞ்சாங்கப்படி காலை 10.46 மணிக்கு குருப் பெயர்ச்சி. 12/=. எங்கும் கிடைக்கும். நூலாசிரியர்: Prof.சத்தியதாசன் (சத்யா) (Mech.E, Elec.E Cey. & Lond.), 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.P.: 021-2753. (5387)

## கைரேகை பார்த்தல்

கைரேகை, ஜாதகம், எண் சோதிடம், திருமணப் பொருத்தம், தெய்வீக நூல் கட்ட, அறிய தொடர்பு கொள்க: சோதிநாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (5183)

## தேவை

கோழிகளைப் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (5398)

## வாடகைக்கு விடப்படும்

சகல வசதிகளுடன் உடுவிலுள்ள வீட்டில் ஒரு சிறு குடும்பத்துடன் சேர்ந்து வாழ மேலும் ஒரு வயோதிபத தம்பதிகளுக்கு வாடகைக்கு இடமுண்டு. தொடர்பு: ஜெயராஜசிங்கம், மான் பாடசாலை ஒழுங்கை, உடுவில். (5390)

## வகுப்புகள்

ஆங்கிலம், கணிதத்தில் புதிய, பழைய பாடத்திட்டத்தில் O/L பரீட்சையில் A,B,C பெறுபேறடையவும் ஆண்டு 8,9,10 உட்பட ஆங்கிலம் A/L, G.A.Q. கற்பிக்கப்படும். தொடர்பு: ஆசிரியர்: 85,சிவன்கோயிலடி, சிவன்கோயில் பின்புறம், திருநெல்வேலி. (5310)

ஆங்கிலத்தில் O/L டிசெம்பர் 2002 இல் நல்ல பெறுபேறுபெற ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் மீட்டல் வகுப்புகள் (Past and Model Question Papers) வருகின்ற வியாழக்கிழமை ஆரம்பமாகிறது. இல.33, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (இலுப்பையடிச் சந்திக்கு அண்மையில்). (5290)

## LOGIC வகுப்புகள்

க.பொ.த (உ/த) 2003, 2004 கல்வி யாண்டுக்கான அளவியல் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன. வீடுகளுக்குச் சென்றும் கற்பிக்கப்படும். தொடர்பு: K.Baba, Market East Lane, Manipay. (5361)

## ஆங்கில வகுப்புகள்

O/L, A/L, பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்கள் ஆகியோர்களுக்கான ஆங்கில வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5362)

## பரிசுத்தினம்

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் பரிசுத்தினம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் க.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக சட்டத்தரணி இ.மொன்மொலின் ஜெறாட் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்கிச் சிறப்பிப்பார். (ம)

## தேவை

யாழ். நகரில் உள்ள புதிய தையல் கடைக்கு சகல தையல் வேலைகளும் தெரிந்த பெண் தேவை.

தொடர்பு: விள். இல. 1553, மே/பா உதயன். (5396)

## விற்பனைக்கு

NEW 29" WEGA SONY T.V., 240W PANASONIC CD PLAYER, DIGITAL VIDEO CAMERA, NEW COMPAQ LAPTOP, CASIO PALM COMPUTERS, PENTAX MZ 50 CAMERA, MICRO WAVE, EXER-CISE MACHINE KITCHEN UTENSILS என்பன உட்பட பல மின்சார உபகர ணங்கள் விற்பனைக்கு உண்டு.

**சம்பந்தர் கிளினிக்**
574/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கிக்கு அருகாக) (5403)

## மலிவு விற்பனை

O.D.O, C.D 125/= ஆளவந்தான், 12B, சமுத்திரம், சிட்டிசன், டும்டும்டும். யாழ்.பல்கலைக்கழகத்தில் சிலப்பதிகார ஆய்வரங்கின் போது தனிநபர்கள் எடுத்த புகைப்படங்களை உடனே பெற்றுக்கொள்ளவும்.

**யதூரஷ் வீடியோ அன் போட்டோ**
15/12, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (5405)

## திருமண வாழ்த்து

இன்று பிரான்ஸில் நடைபெறும் திருமணத்தில்
இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணையும் புதுமணத் தம்பதிகள்

மணமகன்
திருநிறைசெல்வன்
பிரபாகரன் *(பிரபா)*

மணமகள்
திருநிறை செல்வி
அகல்யா *(விஜி)*

இருவரும் பூவும் மணமும் போல் வீணையும் நாதமும் போல்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"
என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் அமுத வாக்குக்கிணங்க ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நீடூழிவாழ மனமார வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி க.விக்னேஸ்வரன் குடும்பம்,
*மீசாலை வடக்கு, மீசாலை.* திரு. திருமதி ந.சிவானந்தன் குடும்பம். (5400)

---

*மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில்*

# இடம்பெயர்ந்த மக்கள் உரிமை பேண புதிய பிரிவு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் உரிமைகளைப் பேணும் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென புதிய அதிகாரி ஒருவர் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த வாரமளவில் இந்தப் பிரிவுக்கென மேலும் ஒரு அதிகாரி கொழும்பில் இருந்து வருகை தரவுள்ளதுடன் புதிய வாகனமொன்றும் எடுத்துவரப்படவுள்ளது. (ம-10)

# வெற்றிலைக்கேணிப் பகுதியில் பனைகள் அதிகளவில் அழிப்பு!

வடமராட்சி கிழக்கு,ஜூன்30

மருதங்கேணிப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் நூற்றுக்கணக்கான பனை மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.

11வருடங்களுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, அழியவளை ஆகிய பகுதிகளில் பெருமளவு பனை மரங்கள் வெட்டி அழிககப்பட்டிருப்பதைகாணக் கூடியதாகவுள்ளது.

வடமராட்சியில் முன்னர் மிகக் கூடுதலான பனை மரங்கள் இப்பகுகளிலேயே காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-182)

# கிளிநொச்சி நூலகத்திற்காக நூல்கள் சேகரிக்கப்படுகின்றன

மண்டைதீவு,ஜூன்30

யாழ்ப்பாண றோட்டறிக்கழகம், யாழ். நகர மைய றோட்டறிக் கழகம், நிலவு டொட்கொம் என்பன இணைந்து, கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் பொது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்வதற்காக நூல்கள் சேர்க்கும் பணியில் இடுபட்டுள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் வாழும் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, பாடமேம்பாடு என்பவற்றைக் கருத்திற் கொண்டு வன்னிப் பாடசாலைகளின் மாணவர் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த நூலகத்தை அமைத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கல்விச் சேவைக்கு நூல்களை தானமாக வழங்க விரும்பும் ஆர்வலர்கள், பொதுமக்கள், நிறுவனங்கள், எழுத்தாளர்கள் மேற்குறித்த நிறுவனங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

புத்தக அன்பளிப்பு, கிளிநொச்சியில் அடுத்தமாதம் 15ஆம்திகதி நடைபெறவுள்ளது என யாழ். 'றோட்டரி' கழகத்தினர் அறிவித்துள்ளனர்.(ம-ரி)

## அஞ்சலி

**தந்தாய்!**
**உன் நினைவில் ஓராண்டு**
**போனதடா என்னவனே!**
**எம் நினைவில் நீ அங்கு**
**எப்படித்தான் தனிமையிலே?**

கவிஞர் பாவலவன்

**பாவிலு சத்தியசீலன்**

(அல்லைப்பிட்டி)

தோற்றம்: 1938.06.15 மறைவு: 2001.06.30

நண்பனே நீ எனக்கு
நண்பனாய் நான் உனக்கு!
கை தட்டும் நாளிலிருந்து
ரை கட்டும் நாள் வரையில்

தந்தையே நீ எனக்கு
தந்தவர் யார் உனக்கு?
விந்தையே உன் எழுத்து
விளங்கவில்லை ஏன் எனக்கு?

பாவலவனே சீலா நீ
பாலகனாய் பாரினிலே
பாடிட்டாய் பழகிட்டாய் இன்று
பறந்து விட்டாய் என் செய்வேன்?

இறந்துவிட்டாய் நீ என்று
இயம்பினாள் என்தாயார்
மறைந்த உன் உடலை
மரத்தடியில் புதைத்தனரோ?

நாள்கள் பலகடந்து
நான் அங்கு வந்துற்றேன்
நாலண்ணன் கற்குழியில்
நான் வண்ணன் காலடியில்

*உன் மைந்தன்*
**வண்ணன்**

(5274)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சுகிர்தினி

விழிசிட்டி, அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இரத்தினம் சுகிர்தினி நேற்றுமுன்தினம் (28.06.2002) வெள்ளிக்கிழமை இரவு ஒரு மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் தயாளன் (சுன்னாகம் பனை, தென்னை கூட்டுறவு பணியாளர்), தஜேந்திரன், தர்சினி, ஜெயந்தி, சுபாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகந்தினி, குணராசா ஆகியோரின் மைத்துனியும் சகீமின் அத்தையும் ஜதுஷனின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மேற்கு முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
இ.தயாளன் (அண்ணா)
(சுன்னாகம் பனை தென்னைவள கூட்டுறவு பணியாளர்)

*விழிசிட்டி,*
*அளவெட்டி மேற்கு* (5393)

உதயன்

## தமிழ் - முஸ்லிம் உறவைச் சூழ விரிக்கப்படும் சதிவலை

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பரவிய வன்செயல்கள் கட்டுமீறிச் சென்றுகொண்டிருக்கின்றன. முன்னொருபோதும் இருந்திராதவாறு அங்கு வன்முறை கோரதாண்டவம் ஆடுகின்றது. நிலைமை எங்குபோய் முடியுமோ என்ற பீதி தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

நிலைமையின் பாரதூரத்தை பிரதமர் ரணிலின் அரசு உணர்ந்துகொண்டிருக்கிறது. தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வன்செயல்களால் இதுவரை எட்டுப்பேர் பலியாகி இருப்பதாகத் தகவல் வெளிவந்துள்ளது. இறந்தவர்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் அடங்குவர். கடைகளும் வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. வணக்க ஸ்தலங்கள், புனித வழிபாட்டிடங்கள்கூட தாக்கப்படடிருக்கின்றன. இரு சமூகங்களுக்கும் சொந்தமான பெருமளவு உடைமைகளும் பொதுச் சொத்துக்களும் அழிக்கப்பட்டுவருகின்றன.

கிழக்கு இப்படிக் கொந்தளிப்பதற்குக் காரணம் என்ன?

அங்கு தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் விரோதமும், குரோதமும் உண்மையில் இருக்கின்றனவா?

இந்தக் கேள்விகளுக்கு விடை கூறுபவர்கள் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிழக்கில் தற்போது இடம்பெறும் வன்செயல்களின் பின்னணியில் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது ஒன்று.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முறித்து மீண்டும் யுத்தத்தை தூண்டிவிட முயலும் சக்திகள் கிழக்கு மாகாணத்தை அதற்குரிய தளமாக மாற்ற முயற்சிக்கின்றன என்பது அடுத்தது.

பிரதமர் ரணிலின் அரசு பதவிக்கு வந்த பிறகு, புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தம் தமிழ் - சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ள இன சௌஜன்னியத்தைவிட தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பலமான சகோதரத்துவ உறவுக்கு அடித்தளமிட்டிருக்கிறது என்பது தெளிவு. தமிழ்த் தலைமைக்கும் முஸ்லிம் தலைமைக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வுடன் கூடிய முதல் இணக்கப்பாடு இந்த நாட்டின் தமிழ் - முஸ்லிம் மக்களின் வரலாற்றில் ஒரு மகத்தான திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் சிறுபான்மையினரான தமிழர்களும், முஸ்லிம்களும் தமக்குள் வேறுபடுவதைவிடுத்து, ஒன்று பட்டு நிற்பதன்மூலமே தமக்குரிய உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற அடிப்படை உண்மையை முஸ்லிம்மக்களும் தமிழ்மக்களும் தெளிவாக உணர்ந்துகொண்டுள்ளனர். இந்த உணர்வு இரு சமூகங்களிடையேயும் ஏற்படுத்தியிருக்கும் ஒற்றுமையான பலம் கண்டு அஞ்சும் தரப்புகளே தற்போது தங்கள் ஆற்றாமையைச் செயலில் காட்டத் தொடங்கியிருக்கின்றன.

வடக்கு - கிழக்கில், தமிழ் - முஸ்லிம் உறவு பலமடைவதை விட்டுவைக்காமல் எப்படியாவது சீர்குலைத்து விடுவதே இந்தச் சக்திகளின் இலக்கு. அதை நிறைவேற்ற விரிக்கப்பட்ட சதி வலையில் சிக்கிக்கொண்ட கும்பல்கள் இப்போது கிழக்கு மாகாணத்தை வன்முறைக் களமாக மாற்றியிருக்கின்றன.

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெளிச்சக்திகளின் தலையீடு இருப்பதாகச் சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாதது. ஏனெனில், வடக்கு - கிழக்கில் உருவாகிவரும் சமாதானச் சூழலை விரும்பாத வெளிநாட்டு சக்திகள் தற்போதைய கலவரங்களின் பின்னணியில் செயற்பட வாய்ப்புண்டு.

உள்நாட்டில் உள்ள சமாதானத்தை விரும்பாத சக்திகளுடன் இணைந்து அமைதியைக் குலைக்க வெளிநாட்டுச் சக்திகள் கைகோத்துச் செயற்படத் தொடங்கிவிட்டன என்பதை கிழக்கு நிலைமை உணர்த்துகிறது.

தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைப்பதன்மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை முறிப்பதற்கு விரிக்கப்படும் மாயவலையில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல் தற்போதைய வன்செயல் நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள சில அரசியல் சக்திகளும் முயற்சிக்கின்றன.

சமாதானத்தை விரும்பும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அமைதிகாத்து, விழிப்புடன் இருந்து விரோத சக்திகளை இனங்காணவேண்டும்.

சதிவலையில் சிக்காமல் இருப்பதுடன் நச்சு சக்திகள் யார் என்பதை இனங்கண்டு அம்பலப்படுத்த தமிழ்பேசும் மக்கள் முன்வரவேண்டும்.

## சம்பள உயர்வு தருமாறு கோரி தோட்டத்தொழிலாளர் போராட்டம்

கொழும்பு,ஜூன்30

தோட்டத்தொழிலாளர்களின் நாள் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோரி பதுளையிலுள்ள மடுல்சீமை, மல்வத்த பிளாண்டேசன் கம்பனிகளின் பிராந்திய அலுவலகத்தின் முன் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமும் சத்தியாக்கிரமும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணித் தலைவர் ரீ.வி.சென்னன் தலைமையில் இவை நடைபெற்றன. முன்னணியின் பொதுச்செயலாளர் எஸ்.சதாசிவம் எம்.பி., உபதலைவர் க.கனகராஜ் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் "தோட்டத் தொழிலாளருக்கு நாள் சம்பளம் 200 ரூபா வேண்டும்", "வாழ்க்கைச் செலவு புள்ளிகளுக்கு அமைய நியாயமான சம்பள உயர்வு தா" என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

இதுபற்றி சதாசிவம் எம்.பியிடம் தொடர்புகொண்டபோது - 2000ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டபோது - வாழ்க்கைச் செலவுப் புள்ளி 2 ஆயிரத்து 500ஆக இருந்தது. ஆனால், இப்போது 3 ஆயிரத்து 250 புள்ளிகளாக உயர்ந்துள்ளது.

தோட்டத்தொழிலாளர்களின் தினசரிச் சம்பளம் 116 ரூபாவாகவே இருக்கின்றது. எனவே, இப்படியான கூட்டு ஒப்பந்தங்கள் இனிமேல் அவசியம் இல்லை.

கட்டம் கட்டமாக நாடளாவியரீதியாக இப்போராட்டம் தொடரும். இறுதியாக கொழும்பில் தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் முன் பல லட்சம் தோட்டத் தொழிலாளர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தத் திட்டமிருக்கிறோம் - என்றார். (ம)




## தரைவழியாக எரிபொருள்கள் எடுத்துவர கூட்டுத்தாபன அனுமதி இன்னும் இல்லை

### வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்30

ஏ-9 தரைவழிப்பாதை ஊடாக எரிபொருள்களைக் குடாநாட்டுக்கு எடுத்துவருவதற்கான அனுமதியைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்னும் வழங்கவில்லை என்று கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய முகாமையாளர் ஜே.ஏ.அந்தோனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தரைவழிப்பாதை ஊடாக எடுத்துவருவதன்மூலம் பெற்றோலின் விலை குடாநாட்டில் தற்பொழுது உள்ளதைவிடக் கணிசமான அளவு குறையும் என்பது உண்மையான விடயம். எனினும் அதனை எடுத்துவருவதுதான் பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது.

ஏனைய பொருள்களை எடுத்துவருவது போன்று பெற்றோலை எடுத்துவருவது கடினம். ஏ-9 தரைவழிப்பாதை சீரானதாக இல்லாததும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அத்துடன் எரிபொருளை எடுத்துவருவதற்கான பொறுப்பை வழங்கப்படுபவர்களின் நம்பகத்தன்மை பற்றியும் ஆராயவேண்டியுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 26ஆயிரத்து 400 லீற்றர் பெற்றோலை ஒரே தடவையில் பவுசர் மூலம் தரைவழியாக எடுத்துவரமுடியும். ஆனால் மேற்குறிப்பிட்ட காரணங்களால்தான் அதனைச் செய்யமுடியவில்லை என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஏ.ஆர்.ஏபல் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார். எனினும் தான் தொடர்ந்தும் இது விடயத்தில் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தார். (ம-10)

## விசாரணைக்கு வாருங்கள் இன்றேல் பதவி விலகுங்கள்

### விமானப் படைத் தளபதியிடம் பிரதமர்

கொழும்பு,ஜூன்30

விசாரணைக்கு வாருங்கள் இன்றேல் பதவி விலகுங்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விமானப் படைத் தளபதி ஜயலத் வீரக்கொடியிடம் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

நடுச் சாமத்தில் பெண் ஒருவரைக் கட்டியணைத்தவாறே காரை ஓட்டி வந்து பொரளைச் சந்தியில் லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார் வீரக்கொடி என்ற குற்றச்சாட்டு குறித்த விசாரணை தொடர்பாகவே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதி லியனகே விபத்து இடம்பெற்றபோது வீரக்கொடியின் காரை அவரது சாரதியே ஓட்டி வந்தார் என்றும் -

காருக்குள் பெண் எவரும் இருக்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

சம்பவத்தை நேரில்கண்ட பொலீஸாரோ வீரக்கொடியின் காரின் முன் ஆசனத்தில் பெண் ஒருவர் இருந்தார் என்று கூறி யிருக்கிறார்கள். (ம)

## நிரந்தர அமைதி ஏற்படும் வரை அகதிகளை அழைக்க வேண்டாம்

### பிரதமருக்கு மாவை கடிதம்

கொழும்பு,ஜூன்30

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்வரை தமிழகத்திலுள்ள அகதிகளைத் திருப்பி அழைக்கக்கூடாது என்று தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

நாட்டில் அகதிகள் திரும்பிவருவதற்கான உகந்த சூழ்நிலை தற்போது இல்லை. ஆனால், அகதிகளை உடனடியாகத் திருப்பி அழைப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன இந்தியாவுக்குச் சென்று இந்திய அதிகாரிகளுடன் பேசி வருகிறார்.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு உள்நாட்டு அகதிகள் முழுமையாக மீளக்குடியேறிய பின்னரே தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளை மீளக் குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மாவை சேனாதிராஜா கேட்டுள்ளார். (ஐ-4-12)

## இலங்கை மாணவர்களுக்கு நோர்வே நாட்டில் புகழாரம்

நோர்வேயிலுள்ள இலங்கை மாணவர்கள் அந்நாட்டு மாணவர்களைவிட உயர் கல்வியில் பிரகாசிக்கின்றார்கள் என்று நோர்வே புள்ளிவிவரப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

நோர்வேயில் 19 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட நோர்வேக்காரர்கள் தொகையில் 26 சதவீதமானவர்கள் உயர் கல்விக்குத் தகுதிபெறுகிறார்கள். ஆனால், அதே வயதுக்குட்பட்ட இலங்கை மாணவர்கள் 48.7 சதவீதமானவர்கள் உயர் கல்விக்குத் தகுதிபெறுகிறார்கள்.

ஜேர்மன் மாணவர்கள் 37.8சதவீதமும் வியட்னாமியர்கள் 37.1 சதவீதமும் இந்தியர்கள் 33 சதவீதமும் உயர் கல்விக்குத் தகுதி பெறுகிறார்கள். (ம)

## 400 பேர் கொண்ட சமாதானக்குழு அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரும்

கொழும்பு,ஜூன்30

பொதுநிர்வாக முகாமைத்துவ சீர்திருத்த அமைச்சர் விஜித அபயவர்த்தன தலைமையில் 400 பேர் கொண்ட சமாதானக் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பிலிருந்து புறப்படும் இந்தக் குழுவினர் 6ஆம் திகதி யாழ்ப்பாணத்தைச சென்றடைய உள்ளனர். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இந்தச் சமாதானக்குழுவில் இடம்பெறவுள்ளனர்.

யாழ்ப்பாணம் செல்லும் வழியில் இந்தக் குழுவினர் வன்னியில் உள்ள பாடசாலைகளுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கலை நிகழ்ச்சி ஒன்றையும் நடத்த இவர்கள் திட்டமிட்டுள்ளனர். (ம)

### நாளை

ஆனி 17
திங்கட்கிழமை
(01.07.2002)
திதி : ஷஷ்டி
வைகறை 5.08 வரை.
நட்சத்திரம்: புரட்டாதி
முன்னிரவு 8.39 வரை.
சுபநேரம் : 11.56 - 1.26
ராகுகாலம் : 7.26 - 8.56
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நல்லதைச் செய்யவும் தீயதைத் தவிர்க்கவும் அறிந்தவனே போதுமான அளவு அறிந்தவனாவான்.

## தமிழ்க் கூட்டமைப்புக் குழு ஜூலையில் இந்தியா விஜயம்

கொழும்பு,ஜூன்30

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு குழு ஒன்று அடுத்தமாதம் இந்தியா செல்லத் திட்டமிட்டு இருக்கிறது. இந்த விஜயத்துக்கு புலிகளின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்று கூட்டமைப்புக் குழு எதிர்பார்க்கிறது.

புலிகளின் மீதான தடையை நீக்குவது, அரசுக்கும் புலிகளுக்கும் இடையே இந்தியாவில் பேச்சு நடைபெற இடம் அளிப்பது போன்ற விடயங்கள் பற்றிப் புதுடில்லி அரசுடன் பேசுவதே கூட்டமைப்புக் குழுவின் விஜயத்தின் நோக்கமாகும்.

இந்தியா 'தந்தைநாடு' என்றும் இந்தியாவின் ஆதரவும் அனுதாபமும் இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்றும் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருப்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம)

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
## 24ஸ்ரீ இசுசு லொறியில் பாவித்த உடற்கோப்பு
## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் 24ஸ்ரீ 9792 இலக்க இசுசு லொறியில் பாவிக்கப்பட்டு பக்குவமாகக் கழட்டிவைக்கப்பட்டுள்ள உடற்கோப்பு விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கூறுவிலையினை எழுத்து மூலம் எதிர்வரும் 12.07.2002 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு முன் சங்கத் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கவும். பழைய உடற்கோப்பைப் பார்வையிட விரும்புவோர் சங்க மொதத விற்பனை நிலைய முன்றிலில் கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(C/22719)

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் காயம்

பண்டியைக் குறிவைத்துக் கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் இடது காலில் படுகாயமடைந்தார். நேற்றுமுன்தினம் காலை 6 மணியளவில புலோப்பளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையாரான ஞானப்பிரகாசம் அமலராசா (வயது 36) என்பவரே காயமடைந்தவராவார். அவர் போதனா வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-4-12)

### தென்மராட்சியில்

## மலேரியா பரவுவதைத் தடுக்க நுளம்பு வலைகள் விநியோகம்

தென்மராட்சி,ஜுன்30

தென்மராட்சி பிரதேசத்தில் மலேரியாக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுபடுத்தும்வகையில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் பொதுமக்களுக்கு நுளம்பு வலைகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

வறுமைக் கோட்டிற்கு மேற்பட்ட வருமானமுடைய குடும்பங்களுக்கு 750 ரூபா விலையில் மேற்படி வலைகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற கொள்ளப்பட்டுள்ளன.

நுளம்புவலை தேவையானோர் மீசாலை ஐயா கடையடியில் உள்ள சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் கேட்டுள்ளன.(எ-117)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
19 ✦ 09 ✦ 1927



மறைவு
24 ✦ 05 ✦ 2002

## திருமதி இராசசிங்கம் கமலேஸ்வரி

24.05.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சிவசதனம்"*
*59/1, பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (5262)

பிரிவால் துயருறும்:
வி.இராசசிங்கம் (கணவர்),
சகோதரர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
05 ★ 12 ★ 1921



மறைவு
31 ★ 05 ★ 2002

## அமரர் அந்தோனி சின்னத்தம்பி

*சீரோங்கு சித்திரை பானு வைகாசித் திங்கள்*
*பேரோங்கு அமரபக்க ஷஷ்டி திதியில்*
*நெடுந்தீவு நன்னகரில் நல்லோன் சின்னத்தம்பி*
*நெறியாளன் அடிசேர்ந்தான் நேர்த்தியுடன்.*

எமது இல்லத்தில் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (5296)





# க்ராக் க்ரீம்

**அனைத்து க்ராக் க்ரீமுடன், போரோசொப்ட் 5கிராம் பக்கெட் இலவசம்**

'க்ராக் க்ரீம்' வலி, எரிச்சல் இரத்தக்கசிவு, விக்கம் என்பவற்றிலிருந்து பாதுகாத்து இழந்த ஈரத்தை மீட்டு வெடிப்புக்களை நிரப்புகிறது. இதன் சிறப்பு ஆயுர்வேத பார்முலா எவ்வித பக்க விளைவையும் ஏற்படுத்தாமல் 14கே நாட்களில் வெடிப்புக்களை நிரப்பி பாதங்களை அழகுபடுத்துகிறது. தொடர்ந்து பாவிப்பதன் மூலம் திரும்பத் திரும்ப வருவதை தடுக்கலாம்.

A PARAS PRODUCTS (C-22713)

விநியோகிப்போர் பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559

# HERO CYCLES

- சர்வதேசரீதியில் ISO சான்றிதழ் பெற்றதும் இலங்கையில் அதிகமாக விற்பனையாகும் பைசிக்கிளுமாகும்
- எட்டு வருட காலம் உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ள ஒரே பைசிக்கிளாகும்
- ஸ்டாண்ட், ஸ்போட்ஸல்ஸ் பைசிக்கிள்களுக்கு கரியர் லொக், பெல், ஸ்டாண்ட் ஆகிய உதிரிபாகங்கள் இலவசமாக வழங்கப்படும்.
- ஹீரோ பைசிக்கிள் வாங்குபவர்களுக்கு இலவசமாக சிங்கப்பூர் போய் வரவும், இருபதாயிரத்திற்கும் அதிகமான பரிசில்களை வெல்லக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது



**யாழ்ப்பாணத்தில்**

| E.S.பேரம்பலம் & கம்பனி | வீ.வேங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ் | ஈஸ்வரன் டிரேடர்ஸ் | பிள்ளையார் சைக்கிள் ஸ்ரோர்ஸ் |
|---|---|---|---|
| 50,52, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 125A, கஸ்தூரியார் வீதி, யாழப்பாணம். | 69, கஸ்தூரியார் வீதி, யாழப்பாணம். | சுன்னாகம் |

HERO CYCLES

Sole Agents

**Faizal Hardware Stores**

74, Dam Street, Colombo 12,
Phone : 433727,423273,384250-3

(C-22643)

# க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு

குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்
க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம்

[illegible]

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**
21" கலர் தொலைக்காட்சி, கட் பிளேயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**
21" கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளேயர் ஒன்று

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**
அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் [illegible]

**ஆறுதல் பரிசுகள்**
100 ஆறுதல் பரிசுகளாக [illegible] 100 பரிசுப் பொதிகள்

**முதலாவதாக அனுப்பிவைப்போருக்கு**
முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைப்போரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய [illegible] ஒன்று

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19ம் திகதி 2002 இக்கு முன் அனுப்பிவையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு - த. பெ. இல. 911 கொழும்பு

(C-22503)

க்லோகாட்

Masters DOR LN: C38/2002

# உலகக் கிண்ணப் போட்டிகளில் கடந்த கால இறுதியாட்டங்கள்!

**29 நாள்கள், 38 ஆட்டங்கள் இலட்சக்கணக்காக ரசிகர்களின் விதம்விதமான உணர்ச்சிப் பிரவாகங்கள், நடுவர்களின் தீர்ப்புகள், எழுப்பிய சர்ச்சைகள் என உலகைத் திரும்பிப் பார்க்கவைத்த உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி ஒருவாறு இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டது. இன்று ஜப்பானில் இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் பிரேஸில் அணியும், ஜேர்மனி அணியும் மோத உள்ளன.**

**இதில் எந்த அணி வென்று உலகக் கோப்பையைக் கைப்பற்றும் என்பது பற்றி ஆருடங்கள், கணிப்புகள், பந்தயங்கள்....., உதைபந்தாட்ட ரசிகர்கள் இவற்றில் மூழ்கி உறக்கமின்றி உள்ளனர். அவர்களை சற்று ஆறுதல்படுத்த கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதி ஆட்டங்களை சற்று பார்க்கலாம்.**

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி முதலில் 1930ஆம் ஆண்டு லத்தின் அமெரிக்க நாடான உருகுவேயில் நடந்தபோது இறுதி ஆட்டத்தில் உருகுவே அணியும், ஆர்ஜென்ரீனா அணியும் மோதின.

லத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த இந்த இரு அணிகளும் இறுதி ஆட்டதுக்குத் தெரிவுசெய்யப்பட்டதனால், இருநாட்டு ரசிகர்களும் வெற்றி தமக்கே என்று மார்தட்டினர். இரு நாடுகளும் அருகருகே இருப்பதனால, ஆர்ஜென்ரீனாவிலிருந்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் உருகுவே நாட்டிற்குள் வள்ளங்கள் மூலம் படையெடுத்தார்கள். தலைநகரான மொணடிவியோவில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தை ஒரு லட்சத்திற்கும் மேறபட்ட ரசிகர்கள் கண்டுகளித்தார்கள். இறுதியில் உருகுவே அணி 4-2 கோல்களால் வெற்றி பெற்றது. உருகுவேயின் அணியின் கப்டன் நஸாஸி தங்க வெற்றிக் கிண்ணத்தை வாங்கி முத்தமிட்டபோது உருகுவே நாடே ஆனந்தத்தில் குதித்தது.

2ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1934ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்றது. இங்கு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இத்தாலியும் - செக்கோசிலவேக்கியாவும் மோதின. இதில் இத்தாலி 2-1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

1938ஆம் ஆண்டு பிரான்ஸில் நடைபெற்ற 3ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியிலும் இத்தாலியே வெற்றிபெற்றுச் சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டது. இந்த இறுதி ஆட்டத்தில் இத்தாலிய அணி ஹங்கேரி அணியை 4-2 கோல் கணக்கில் வெற்றிபெற்று 2ஆவது தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

2ஆவது உலகப் போரின் பின், அதாவது 12 வருடங்களுக்குப் பின்பு 1950ஆம் ஆண்டு 4ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நவீன ஏற்பாடுகளுடன் பிரேஸிலில் நடைபெற்றது. உதைபந்தாட்டத்தில் மயங்கிக் கிடக்கும் பிரேஸில் நாட்டின் தலைநகரான ரியோடியெனிரோவில் மிகப் பிரமாண்டமான விளையாட்டு அரங்கு உருவானது. இப்புதிய விளையாட்டு அரங்கில் கிட்டத்தட்ட 2 லட்சம் ரசிகர்கள் அமர முடியும். இப்புதிய விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் உருகுவே அணியும், பிரேஸில் அணியும் மோதின. சொந்த நாட்டு மக்கள் மத்தியில் இப்போட்டி நடைபெற்றதனால் பெரும்பாலும் பிரேஸில் அணியே வெற்றிபெறும் என்று பெரும்பாலானோர் எதிர்பார்த்தபோதிலும் இறுதியில் உருகுவே அணி 2-1 கோலகளால் வெற்றிபெற்று, 2ஆவது தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

5ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1954ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது. இங்கு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில்தான் முதல் தடவையாக 24 அணிகள் பங்குபற்றும் வாய்ப்பை உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் வழங்கியது. இங்கு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மனியும், ஹங்கேரியும் மோதின. இறுதியில் மேற்கு ஜேர்மனி 3-2 கோல்களால் வெற்றிபெற்று முதல் தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

6ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1958ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்றது. இங்கு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சுவீடன் அணியும, பிரேஸில் அணியும் மோதிக் கொண்டன. போட்டி ஆரம்பமானதும் சுவீடன் அணி முதலாவது கோலை போட்டது. சொந்த நாடு, சொந்த மக்கள் கேட்கவா வேண்டும். கரகோஷம் வானைப் பிளந்தது. இதைத் தொடர்ந்து சுவீடன் 2ஆவது கோலை போட்டபோது சுவீடன் நாட்டு ரசிகர்கள் தமது இருக்கைகளை விட்டு எழுந்துநின்று கரகோஷம் செய்து தமது அணிக்கு மேலும் மேலும் உற்சாகம் ஊட்டினார்கள். சுவீடன் அணி அடுத் தடுத்து இரு கோல்களைப் போட்டபோதிலும், பிரேஸில் அணியினர் சிறிதேனும் சோர்வடையாது தனனம்பிக்கை உணர்வுடன் விளையாடினார்கள். பிரேஸில் அணியின் முன்னணி வீரரான பீலே (உதைபந்தாட்ட மன்னர் என்னும் பட்டம் பெற்றவர், முதல்தர ஆட்டங்களில் ஆயிரத்திற்கு மேல் கோல்களைப் போட்ட உலகின் ஒரே ஒரு வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தியவர்) மிகவும் சாதுரியமாக ஆட ஆரம்பித்தார். இவருக்குப் பக்கத்துணையாக வீரர் காரிஞ்சா இருந்தார். இருவருமாக இணைந்து மின்னல் வேகத்தில் கோல்களைப்போட ஆரம்பித்தார்கள். ஆட்ட முடிவல் பிரேஸில் அணி 2-3 கோலகளால் சுவீடன் அணியை வெற்றி கண்டு முதல் தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் வீரர் பீலே 4 கோல்களைப் போட்டுச் சாதனை படைத்தார்.

## திறமை மட்டும் போதாது அதிர்ஷ்டமும் வேண்டும்

7ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1962ஆம் ஆண்டு லத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான சிலி நாட்டில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதியாட்டத்தில் பிரேஸிலும் செக்கோசிலவேக்கியாவும் போட்டியிட்டன. இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதலின் முடிவில் பிரேஸில் அணி 2-1 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தைத் தொடர்ச்சியாக 2ஆவது முறையாகக் கைப்பறறியது. பிரேஸில் அணி வீரர் பீலே சிறந்த ஆட்ட வீரராகத் தெரிவுசெய்யப்பட்டு தங்கப் பந்தைப் பரிசாகப் பெற்றார்.

8வது உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி 1966ஆம் ஆண்டு பிரிட்டனில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரிட்டிஷ் அணியும், மேற்கு ஜேர்மனி அணியும் மோதின.

பிரிட்டிஷ் அணி இறுதி ஆட்டத்

**கு.யோகன்ராஜ்**

திற்குத் தெரிவுசெய்யப்பட்டதினால் வெம்பிள்டன் மைதானம் இங்கிலாநது இரசிகர்களால் நிறைந்து வழிந்தது. இறுதி ஆட்டத்தில் கலந்துகொண்ட மேற்கு ஜேர்மன் அணியும், பிரிட்டிஷ் அணியும் ஒருவருக்கொருவர் சளையாது மோதினார்கள். ஆட்டம் முடிவடைவதற்கு ஒரு சில நிமிடங்கள் இருக்கும்போது பிரிட்டிஷ் அணியினர் ஒரு கோலைப் போட்டார்கள். பிரிட்டிஷ் அணியின் கப்டனும், கோல் காப்பு வீரருமான பொபிமோர் உலகக் கிண்ணத்தை வாங்கி முத்திட்டபோது வானவெடிகளின் ஓசையும் இரசிகர்களின் கரகோஷமும் வானைப் பிளநதன. பிரிட்டனில் நடைபெற்ற மேறபடி உலககிண்ணப் போட்டி ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரு சில சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தன. பிரிட்டனில் உள்ள உலக உதைபநதாட்டச் சமமேளனத்தின் தலைமைச் செயலகத்தில் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த உலகக் கிண்ணம திடீரென இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இச்செய்தி உலகம் முழுவதும் பெரும் பரபரப்பையும், ஆச்சரியததையும் ஏற்



படுத்தியது. ஒரு வாரத்தின் பின்பு மேற்படி வெற்றிக்கிண்ணத்தை பக்கிங்ஹாம் அரண்மனை அருகில் ஒரு குப்பைத் தொட்டியிலிருந்து பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இறுதி ஆட்டத்தின்போது பிரிட்டிஷ் அணியினர் அடித்த பந்து கோலகம்பத்தின் குறுக்குச் சட்டத்தில் பட்டு தரையில் இருந்த கோட்டுக்கு வெளியே விழுந்ததாகவும் இதை மத்தியஸ்தர் தவறுதலாக கோட்டுக்கு உள்ளே விழுந்ததாகத் தெரிவித்ததனால்தான் பிரிட்டிஷ் அணி வெற்றிக் கிண்ணத்தை முதல் தடவையாகக கைப்பறறும் வாய்ப்பு ஏற்பட்டது என்றும் அப்போது பல அவதானிகள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

9ஆவது உலகக் கிண்ணப் போட்டி 1970ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் பிரேஸில் அணியும் இத்தாலிய அணியும மோதின. இப்போட்டியில் பிரேஸில் அணி மிக இலகுவாக இத்தாலி அணியை 4-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்று 3 தடவைகள உலகக் கிண்ணத்தைக் கைப்பறறிய முதலாவது நாடு என்ற பெருமையையும் பெற்றது. அத்துடன் பிரேஸில் அணிக்குக் கப்டனாக இருந்த வீரர் பீலே மூன்று உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடிய முதலாவது வீரர் என்ற சாதனையையும் ஏற்படுத்தினார்.

10ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1974ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மன் அணியும் பக்கத்து நாடான போலந்து அணியும் மோதிக் கொண்டன. இப்போட்டியின் போது மேற்கு ஜேர்மனியின் மூனிச் நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான விளையாட்டு அரங்கில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரசிகர்கள் கூடியிருந்தார்கள். ஆட்ட முடிவில் மேற்கு ஜேர்மன் அணி 2-1 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தை 2ஆவது முறையாகக் கைப்பற்றியது.

11ஆவது உலகக் கிண்ணப் போட்டி 1978இல் ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணியும, ஹெலண்ட் அணியும் மோதிக் கொண்டன. 1930ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது உலகக்கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றி வாய்ப்பை நழுவவிட்ட ஆர்ஜென்ரீனா இம்முறை தனது நாட்டில் நடைபெறும் போட்டியிலாவது வெற்றி பெறவேண்டும் என்ற உணர்வுடனும் சொந்த நாட்டு மக்களின் கரகோஷதின் மத்தியிலும் சிறப்பாக விளையாடி 3-1 கோல்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று முதல் தடவையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

12ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1982ஆம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலியும், மேற்கு ஜேர்மன் அணியும் மோதின. ஆட்டமுடிவில் இத்தாலிய அணி 3-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்று மூன்று முறைகள் (1934, 1938, 1982) உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய 2ஆவது நாடு என்ற பெருமையைப் பெற்றது. இத்தாலிய அணியில் பங்குபற்றிய வீரர்கள் அனைவருக்கும் தலா 65 ஆயிரம் அமெரிக்க டொலர்களை இததாலிய அரசு வழங்கிக் கௌரவித்தது.

13ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி மெக்ஸிக்கோவில் 1986ஆம் ஆண்டு நடைபெற்றது. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி மெக்ஸிக்கோவில் நடைபெறுவது இது இரண்டாவது முறையாகும். 1970ஆம் ஆண்டு 9ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி மெக்ஸிக்கோவில் நடைபெற்றது குறிப்பிடத்தககது. 13ஆவது போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவும், மேற்கு ஜேர்மனியும் போட்டியிட்டன. இப்போட்டியில் மேற்கு ஜேர்மன் அணி சிறப்பாக விளையாடியபோதிலும் இறுதியில் ஆர்ஜென்ரீனா அணியின் டீகோமாரடோனாவின் சாதுரியத்தால 3-2 கோல்களினால் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்று புதிதாக வடிவமைக்கப்பட்ட 5கிலோ தங்க கிண்ணத்தைக் கைப்பற்றியது.

14ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டி 1990ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்றது. 1934ஆம் ஆண்டு நடைபெற்ற 2ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியும் இத்தாலியில்தான் நடைபெற்றது. 14ஆவது போட்டியின் இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மன் அணியும் - இத்தாலிய அணியும் மோதின. இரு அணிகளுக்குமிடையே நடைபெற்ற கடும் போட்டியின் முடிவில் மேற்கு ஜேர்மன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தை 3ஆவது தடவையாகப் பெறும் (1954, 1974, 1990) நாடு என்ற புகழையும் பெற்றது.

15ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 1995ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள லொஸ்ஏஞ்சல் நகரில் நடைபெற்றது. இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேஸில் 3-2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

16ஆவது உலகக்கிண்ணப் போட்டி பிரான்ஸில் நடைபெற்றது. அப்போட்டிகளில் முழுமையான திறமையை வெளிப்படுத்தியிருந்த பிரேஸில் அணிக்கும் உலக்க் கோப்பையை ஏற்பாடு செய்த பிரான்ஸ் அணிக்கும் இடையில் இறுதி ஆட்டம் நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் பிரான்ஸ அணி 3-0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டிக்கொண்டது.

பலரும் எதிர்பார்த்த பிரேஸில் அணிக்கு கோல் போடக்கூடிய ஒரு சில சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனைத் தவறவிட்டதன்மூலம் இவ அணி 5ஆவது தடவை உலகக் கோப்பையைச் சுவீகரித்து சாதனையை நிலைநாட்ட முடியாமல் போய்விட்டது.

ஆகவே, கடந்த முறை கைவிட்டுப் போன உலகக் கோப்பையை இந்தத் தடவை கைப்பற்றிவிடும் வேகத்தில் பிரேஸில் அணியும் -

பார்ப்போம் ஒரு கை என்ற தாகததுடன் ஜேர்மன் அணியும் - இன்று களமிறங்குகின்றன. ஆட்டத்தில் திறமையுடன் அதிர்ஷ்டமும் கைகொடுக்கப்போவது யாருக்கு....? ★

# மூதூரில் சேதங்களை புலிகள் பார்வையிட்டனர்

## பதற்றநிலை நீடிக்கின்றது

மூதூர், ஜுன்30

மூதூர் நகரில் அமைதி நிலவுகிறது. வியாபார நிலையங்கள், அரச அலுவலகங்கள் என்பன மீண்டும் இயங்கத் தொடங்கின. தனியார் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டன. கடல் வழிப் போக்குவரத்தும் நடைபெற்றது. அமைச்சர்கள் மட்ட உயர்குழு மூதூருக்கு வந்து மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகளை அடுத்தே அசம்பாவிதங்கள் ஓய்ந்தன.

பதற்றநிலை முற்றாக நீங்கி இடம பெயர்ந்தோர் வீடும் திரும்பும் வரை உணவு மற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும்படி அமைச்சர்கள் பிரதேச செயலாளரைப் பணித்திருக்கின்றனர்.

600இற்கும் அதிகமான மேலதிகப் பொலீஸார் சேவைக்கு அழைக்கப்பட்டு எல்லைக் கிராமங்களில் இராணுவத்தினருடன் இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகினறனர்.

இதற்கிடையே, மூதூர்ப் பகுதியில எரித்து நாசமாக்கப்பட்டுள்ள வீடுகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபனும் மூதூர் தெற்கு பொறுப்பாளர் சுகுமாரும் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டனர். இடம்பெயர்ந்தவர்களை மீண்டும குடியமர்த்தவும் அங்கு இருசாராருக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தவுமே இவர்கள் விஜயம் செய்தனர்.

சாம்பூருக்கும் மூதூருக்கும் இடையிலான பஸ் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தபால் சேவைகளும் இல்லை. அசம்பாவிதங்கள் காரணமாக வெளியேறிய அகதிகள் தொடர்ந்தும் சேனையூர் மத்திய மகா வித்தியாலயத்திலேயே தங்கி இருப்பதால் பாடசாலை நடைபெறவில்லை. இங்கு தங்கி இருப்பவர்களுக்கு மூதூர் கிழக்கு மக்கள் உணவு மற்றும் உடைகள் சேகரித்து வழங்குகின்றனர்.

மூதூர் கிழக்கில் இருந்து பாலையூர்வரை ஓரளவு சனநடமாட்டம் காணப்படுகிறது. மூதூர் கிழக்கில் கர்ப்பிணித் தாய் ஒருவர் தனியார் மீன்பிடிப் படகுமூலம் கொண்டுசெல்லப்பட்டார். பின் இராணுவத்தினர் தமது பஸ்ஸில் அவரைக் கொண்டு சென்று மூதூர் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதற்கிடையே, கைதுசெய்யப்பட்ட ஒரு மாணவனை விடுவிக்கக் கோரி பாடசாலை மாணவர்களால் மூதூர் பொலீஸ் நிலையம்வரை ஊர்வலம் நடத்தப்பட்டது.

(ஐ-3-12-4)

# உதவித் தாதியர் பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

- ☆ 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ☆ உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- ☆ கல்வித் தகைமை: கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)
- ☆ சான்றிதழ்கள் 02 - ஒன்று கிராம சேவை அலுவலரிடம் பெற்றதாக இருக்கவேண்டும்.

விரும்பும் விண்ணப்பதாரர் மேற்கூறியவற்றுடன் 08.07.2002 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு வீட்டுத் தாதியர் பராமரிப்புப் பிரிவு, இல.173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சமுகமளிக்கவும்.

(சி-22742) - முகாமையாளர்.

## ஊர்காவற்றுறை, பிரதேச சபை, ஊர்காவற்றுறை

வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபை உப-தலைவரினால் பின் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்குக் கேள்விகள் கோரப் படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் 12.07.2002ஆம் திகதி நண்பகல் 12.00மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களிடமும், பொதுஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.
03. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து "தலைவர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை"இற்கு பதிவுத் தபால்மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களுக்கு 15.07.2002 நண்பகல் 12.00மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
04. கேள்விகள் 15.07.2002 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | தம்பாட்டி-பெரியபுலம் வீதி திருத்தம் | 2500/- | 250.00 |
| 02. | தம்பாட்டி - பெரியபுலம் மேற்குப் பக்க முதலாம் ஒழுங்கை திருத்தம் | 3000/- | 300.00 |

நா.திருச்செல்வம்,
உப-தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

*ஊர்காவற்றுறை பிரதேச சபை,*
*ஊர்காவற்றுறை.*
(C/22741).

## குளிர்சாதனப் பெட்டி பொருத்தப்பட்டது

தென்மராட்சி,ஜூன்.

சாவகச்சேரி வைத்திய அதிகாரி பணிமனையில் சூரிய மின்கலத்தில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி பொருத்தப்பட்டுள்ளது.

அலுவலகத்திற்கு வழங்கப்படும் மருந்து வகைகளை 24 மணி நேரமும் பாதுகாப்பதற்காக இந்த குளிர் சாதனப் பெட்டி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## அறவழிப் போராட்ட குழு அலுவலகம் புனரமைப்பு

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த அறவழிப் போராட்டக் குழுவின் கைதடி நுணாவிலில் உள்ள அலுவலகம் மற்றும் கலையரங்கம் ஆகியவை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவை எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி நுணாவிலில் இயங்கிய நிலையத்தின் பொது நூல் நிலையம் பலத்த சேதமடைந்ததுடன் அங்கிருந்த ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான புத்தகங்களும் அழிந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-117)


O/L, 10, 09
மாணவர்களே!
தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்திபெற சுயமுகவரியிட்ட (முத்திரை ஒட்டிய) கடித உறையுடன் எழுதுங்கள்!
ஆசிரியர்:ந.க.கஜரூபன்
80, அம்மன் கோயில் வீதி,
பண்டாரிக்குளம்,
வவுனியா.
(5171)

தேவை
மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ள ஆண் தேவை. வயது 25–40 இடையில் விரும்பத்தக்கது.
தொடர்பு:
விள.இல.1552, மே/பா. உதயன். (5392)

மாதச் சம்பளம் ரூபா 5,80,000/=!
விவரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன்" நாளிதழைப் பார்க்கவும். அல்லது நேரில் வரவும்.
திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(5367)

ஜெசித்தாரா
புதுப்பொலிவுடன் வழமைபோல் உணவுப் பொதிகள்
நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை.
குங்குமப்பூ சிக்கன்புரியாணி, சில்லி சிக்கன்
விலை குறைக்கப்பட்டுள்ளது.
ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா உங்கள் விருந்தகம்
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5376)

தேவை
ஆங்கில அறிவும், விற்பனை அனுபவமும் உள்ளவர்கள் - புத்தகங்கள், உபகரணங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்கள் - தேவைப்படுகின்றனர்.
நேரில் வரவும்:
All Ceylon Distributors,
212, K.K.S. Road, Jaffna.
(C/22738)

யாழ் நகர வாசிகளே !
இதோ இப்போது உங்கள் தேவையறிந்து உங்கள் கரங்களுக்கும்,
உயர்தரமான மெழுகு தடவப்பட்ட பாதுகாப்பான
அலடின் தீப்பெட்டி
ஏக விநியோகத்தர்:
ரூபா வெர்சடைல் டிரேடர்ஸ்
104ஏ, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(C/22682)


# 31ஆவது நாள் நினைவஞ்சலி



## திருமதி சிவகாமிப்பிள்ளை கந்தசாமி

31.05.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் நினைவாக துன்னாலை மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவகந்தஸ்தான்,*
*துன்னாலை மேற்கு, கரவெட்டி*

பிரிவால் துயருறும்:
த.கந்தசாமியும்
குடும்பத்தினரும்.
(5337)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிறிஜெற் இம்மானுவேல்

*(இளைப்பாறிய ஆசிரியை, உயரப்புலம் றோ.க.பாடசாலை, ஆனைக்கோட்டை)*

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பிறிஜெற் இம்மானுவேல் 25.06.2002 அன்று தெஹிவளையில் காலமானார்.

இவர் யுடிற்றாவின் அன்புத் தாயாரும் சக்திகுமாரின் அன்பு மாமியாரும் பிறேமித்தா, நர்மித்தா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

இவரது நல்லடக்க ஆராதனையும் இறுதிக்கிரியைகளும் எதிர்வரும் (02.07.20 ) செவ்வாய்க்கிழமை தெஹிவளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*42,இன்னவண்டவெற் இடம்,*
*தெஹிவளை.* (5378)

*தகவல்:*
யுடிற்றா சக்திகுமார் *(மகள்)*

## திருமதி கந்தையா தங்கம்மா

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி வடக்கு புலோலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கம்மா நேற்று (29.06.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை கந்தையா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் தெய்வானைப்பிள்ளை (தாதிய உத்தியோகத்தர் ஆ.வை. பருத்தித்துறை), பாலசுந்தரம் (நிர்வாக அலுவலர் மா.வை. தெல்லிப்பழை), சாந்தநாயகி (ஆசிரியை இந்து த.க.பாடசாலை மருதங்கேணி), இராசசுந்தரம் (இத்தாலி), உதயநாயகி, ஞானசுந்தரம் (ஜேர்மனி), Dr.சிவசுந்தரம் (CD&MH பாவற்குளம்), வரதநாயகி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். கணபதிப்பிள்ளை (மீன்பிடி பரிசோதகர்), மங்கையற்கரசி, காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் கமலேஸ்வரி (இத்தாலி), கந்தசாமி (கிராமஅலுவலர் புலோலி மேற்கு), சுமதி (ஜேர்மனி), சுமதி (ஆசிரியை வவுனியா), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்மசீலன், தர்ஷினி, தர்மரூபி, தர்ஷனன், மைதிலி, பைரவி, உதயரூபன், ராகுலன், நர்மதன், ஆதித்தன், துர்க்கா, பிரகாஷ், பிரசாயினி, ஆதவன், மகேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது புலோலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஆலடி,*
*புலோலி தெற்கு, புலோலி.* (5389)

*தகவல்:*
க.பாலசுந்தரம் *(மகன்)*

# சிவாச்சாரிய அபிஷேக வாழ்த்து

## (குருப்பட்டமளிப்பு)

சித்தன்கேணி தனுவோடைப்பதி சிவகாமி அம்பாள் சிவசிதம்பரேஸ்வரரை நித்தியம் அர்ச்சிக்கும் பேறு பெற்றவரும்

- ❖ சித்தன்கேணி சிவஸ்ரீ த.ஞானபண்டிதக் குருக்கள்
- ❖ சுருவில் சிவஸ்ரீ சோ.நடராஜக்குருக்கள்
- ❖ கரணவாய் சிவஸ்ரீ த.காசிநாதக் குருக்கள்

ஆகிய பெரியவர்களின் பேரனும் குருபரம்பரையில் வழிவந்தவருமாகிய

**பிரம்மஸ்ரீ சபாரத்தினசர்மா வாஸுதேவசர்மா**

**(சிவன் தேவஸ்தானம் - சித்தன்கேணி)** அவர்களுக்கு சமய, விஷேச, நிர்வாண, ஆச்சாரிய அபிஷேக தீட்சைகளைப் பெற்று சைவத்தின் பெருவிழாக்களை செய்யத் தகுதி வழங்கும் குருப்பட்டமளிப்பு விழா நிகழும் சித்திரபானு வருடம் ஆனித்திங்கள் 16ஆம் நாள் இன்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.15 மணிமுதல் 11.15 மணிவரை உள்ள சுபமுகூர்த்தத்தில் சிவன் அருளால் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நிகழ்வுறுகிறது.

குருப்பட்டம் பெறும் **பிரம்மஸ்ரீ சபா வாஸுதேவசர்மாவின்** சைவசமய சிவப்பணிகள் சிறப்புற ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.

மஹாமாரி அம்மன் கோயில்,
சிரம்பான் மலேசியா.

சிவஸ்ரீ S.சந்தானகோபாலக்குருக்கள்,
ஸ்ரீமதி வைதேகி குடும்பத்தினர்.
(5266)

# வியாழ மாற்றம்

## உங்களுக்கு எப்படி?

தேவர்களுக்கு குருவான பிரகஸ்பதி, வரும் ஜூலை 5ஆம் திகதியன்று மிதுன ராசியிலிருந்து கடக ராசிக்கு மாறுகிறார். வாக்கிய பஞ்சாங்கப்படி ஜூன் 30ஆம் திகதி குருப்பெயர்ச்சி என்று கூறப்பட்டாலும் டிகிரி சுத்தமாகக் கணித்துப் பார்த்ததில் ஜூலை 5ஆம் திகதியை குருப் பெயர்ச்சி தினமாகக் கொள்வதே ஜோதிட விதிகளின் கீழ் பொருத்தமாக அமைகிறது.

குரு, மற்ற எல்லா கிரகங்களைவிட சக்தி வாய்ந்தவர். ஒவ்வொரு ராசியிலும இவர் ஓராண்டுக் காலம் சஞ்சாரம் செய்கிறார். இந்த வருடம் தனக்கு உச்ச ஸ்தானமாக விளங்கும் கடக ராசியில் பிரவேசிக்கிறார். இவ்வாறு தனது உச்ச ஸ்தானத்துக்கு குரு வருவது 12 வருடங்களுக்கு ஒருமுறை அரிதாக நிகழ்வதாகும்.

கடகத்தில் குரு பிரவேசிக்கும்போது காமதேனு, கற்பக விருட்சம் சிந்தாமணி போல் எல்லோருக்கும் ஏராளமான நற்பலன்களை வாரி வழங்குவார். அதாவது வரப்போகின்ற ஒரு வருட காலத்திலும், பெரும்பாலும் நல்ல பலன்களையே நல்குவார். இது ஓரளவுக்கு எல்லா ராசியினருக்குமே பொருந்தும்.

### மேடம்

எடுத்த காரியத்தை மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது முடித்துக் காட்டவல்ல துணிவுடைய மேடராசி வாசகர்களே!

பொது: உங்கள் ராசிக்கு 9க்கும் 12க்கும் அதிபதியான குருபகவான் கடக ராசியில் 4ஆவது இடத்தில் பிரவேசம் செய்கிறார். இதனால் நீண்ட நாள்களாக உங்களை அலைக்கழித்த சொத்து விவகாரங்கள் முடிவுக்கு வரும். பலருக்கு வாகன யோகம் உண்டாகும். உச்ச ஸ்தானத்தில் இருக்கின்ற குரு பகவான் உங்களுக்கு ஏராளமான நன்மைகளை வாரி வழங்குவார்.

திருமணமாகாத மேடராசி அன்பர்களுக்கு கெட்டிமேளம் கொட்டுகிற ஓசையைக் கேட்கும் பாக்கியம் உண்டாகும். கடன் தொல்லைகள் படிப்படியாக விலகும்.

உத்யோகஸ்தர்கள்: நெடு நாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வோ அல்லது மாற்றமோ இந்த வருடம் கிடைத்துவிடும். செய்து கொண்டிருக்கும் பணியில் உங்களுடைய ஆர்வம் அதிகரிக்கும்.

வியாபாரிகள்: நீண்ட காலமாக நிலுவையில் இருந்த கடன்கள் வசூலாகும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கடந்த காலத்தில் ஏற்பட்ட நஷ்டங்களை இந்த வருடம் சரி செய்து கொண்டுவிடுவீர்கள்.

விவசாயிகள்: கடந்த ஆறு மாதமாகவே உங்களுடைய நிலைமை அதிகம் மெச்சும்படியாக இருக்கவில்லை. இனி அந்த நிலைமை மாறும். வருண பகவானின் கருணை உங்களுக்குக் கட்டாயம் உண்டு. தானிய விளைச்சல் அமோகமாக இருக்கும்.

அரசியல்வாதிகள்: உங்களுக்கு ஏற்பட்டிருந்த கெட்ட பெயர் இப்போது நீங்கி விடும். கட்சித் தலைமையால் பாராட்டப்படுவீர்கள். புதிய பதவிகள் பலருக்குக் கிடைப்பது நிச்சயம்.

கலைத்துறையினர்: எதிரிகளால் வாய்ப்புகள் பறிபோன நிலைமை இனி இல்லை. வெளியில் சிரிப்பும், உள்ளுக்குள் வேதனையுமாகத் திரிந்த நீங்கள், இனி புத்துணர்வுபெற்று புதுப்பொலிவோடு வலம் வருவீர்கள். நல்ல பல வாய்ப்புகளைப் பெற்று உங்கள் திறமையை உலகறியச் செய்வீர்கள்.

பெண்கள்: இல்லத்தில் அமைதி தவழும். நிறைய சுப காரியங்கள் நடைபெறும். மனை, வீடு சம்பந்தப்பட்ட வழக்கு விவகாரங்களில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு கிடைக்கும்.

மாணவமணிகள்: ஞானம் பெருகுகிற வருடம் இது. உங்களுடைய கல்வி மற்றும் மேற்படிப்பு முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

அறிவுரை: பன்னிரண்டு வருடத்துக்கு ஒருமுறை வருகின்ற இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தக்கபடி பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள்.

### இடபம்

திட்டங்களை வெளியே சொல்லாமல், அதேநேரம் தீர்மானமாகச் சிந்தித்து செயல்படுத்தக்கூடிய மன ஆற்றல் கொண்ட இடபராசி வாசகர்களே!

பொது: உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்துக்கு குரு வருகிறார். கடந்த இரண்டரை வருடமாக ஜென்ம ஸ்தானத்தில் இருந்த சனியால் பலவித மனக்கஷ்டங்களையும், பணத்தட்டுப்பாட்டையும் நீங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தீர்கள்.

ஆயினும் அஷ்டம லாபாதீசனும், 8க்கும் 11ஆம் இடத்துக்கும் அதிபதியுமாகிய குரு பகவான் வாக்கு ஸ்தானத்தில் நின்று உங்களை ஏராளமான கெடுதல்களிலிருந்து காப்பாற்றி வந்தார். இப்போது அவர் கடகத்துக்கு வந்ததும் தீராத உடல் நோய்களையும் தீர்த்து வைப்பார். கடந்த காலத்தில் நஷ்டமானவற்றை இப்போது மீட்டுத் தருவார். உங்கள் துன்பங்கள் அனைத்தும் நீங்கி இன்பமயமான வாழ்வைப் பெறுவீர்கள்.

உத்யோகஸ்தர்கள்: இதுநாள் வரை அலுவல் சம்பந்தமாக உங்களை ஆட்டிப்படைத்த பிரச்சினைகள் தீர்ந்து விடும். ஊதிய உயர்வு கிடைக்கும். வேலைப்பளு குறைந்து நிம்மதி உண்டாகும்.

வியாபாரிகள்: கடந்த இரண்டரை வருட காலமாக நீங்கள் சந்தித்த நஷ்டங்கள் இப்போது ஈடுகட்டப்படும். வியாபார விருத்தி ஏற்படும். லாபங்கள் கூடும்.

விவசாயிகள்:சென்ற ஆண்டைவிட விளைச்சல் அதிகமாக இருக்கும். விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்.

அரசியல்வாதிகள்: கடந்த காலத்தில் பட்ட காயங்களுக்கு மருந்து போடுகிற வேலையை குரு பகவான் செய்வார். உங்கள் பெயரும் புகழும் பிரகாசிக்கும். இருப்பினும் எதிரிகளிடம் சற்று எச்சரிக்கை தேவை. தேக நலனிலும் கவனம் செலுத்தவும்.

கலைத்துறையினர்: கடந்த ஐந்து வருடமாகவே உங்களில் பலருடைய நிலைமை போற்றத்தக்கதாக இல்லை என்பதே உண்மை. இனி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. புதிய வாய்ப்புகள் உருவாகும். தன ஆதாயங்கள் கட்டாயம் உண்டு.

பெண்கள்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மனத்தைப் பிசைந்து கொண்டிருந்த கவலைகள் விலகிவிடும். சில்லறைக் கடன்கள் அடைபடும்.

மாணவமணிகள்: சிலருக்கு படிப்புக்கு அப்பாற்பட்ட போக விடயங்களில் மனம் செல்லலாம். எனவே கட்டுப்பாடு காத்து, கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தினால் எதிர்காலம் இனிமையானதாக அமையும்.

அறிவுரை: பண வரவு திருப்திகரமாக இருப்பினும் விரயங்களுக்கும் வாய்ப்புண்டு. எனவே அநாவசியமான செலவுகளைத் தவிர்த்துவிடவும்.

### மிதுனம்

நிதானமான போக்கும், நேர்மையான எண்ணங்களும், கம்பீரமான தோற்றமும் கொண்ட மிதுன ராசி வாசகர்களே!

பொது: உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்துக்கும், 10ஆம் இடத்துக்கும் அதிபதியான குருபகவான் ஜென்மத்தை விட்டு நீங்கி, கடக ராசியில் பிரவேசிக்கிறார். இதனால் ஸ்வாசகோச பாதிப்புகளும், ஏனைய உடல் சம்பந்தப்பட்ட கோளாறுகளும் பெருமளவு நீங்கும்.

கடந்த காலத்தில் ஏழரைச் சனியின் பிரபாவத்தால் நீங்கள் பல பாதிப்புகளுக்கு உள்ளாகி வந்தீர்கள். ஜென்மத்தில் சனி வரும்போது குருவைவிட அவருடைய பிரபாவமே அதிகரிக்கும். ஆயினும் கவலைப்பட வேண்டாம். 2ஆம் இடத்தில் இருக்கும் குரு பகவான், சனியின் தீவிரத்தைக் குறைத்து உங்களைக் காப்பாற்றிவிடுவார்.

மேலும் 6ஆம் இடத்திலும், 10 ஆம் இடத்திலும் குருவின் பார்வை விழப்போவதால் பல பிரச்சினைகளிலிருந்து சுலபமாகத் தப்பித்து விடுவீர்கள்.

உத்யோகஸ்தர்கள்: இதுநாள் வரை வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலை அமையும். ஏற்கனவே பணியில் இருப்பவர்களுக்குச் சிரமங்கள் விலகும். அதிகாரிகளின் ஆதரவு பெருகும்.

வியாபாரிகள்: படிப்படியாக லாபம் அதிகரிக்கும். மலைபோல் வரும் சோதனைகள் எல்லாம் பனிபோல் விலகிவிடும்.

விவசாயிகள்: ஓரிரண்டு மாதங்களுக்குப் பின் விவசாயத்தில் சிறந்த முன்னேற்றத்தைக் காணலாம். நில சம்பந்தப்பட்ட விவகாரங்களில் நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தால் இந்த வருடத்தில் அதை ஈடுகட்டும்படி உங்கள் வருமானம் உயரும்.

அரசியல்வாதிகள்: கையருகில் வந்து நழுவிப்போன பதவிகள் இனி உங்கள் காலடியில் வந்து விழும். உங்கள் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் உருவாகும். இருப்பினும் பேராசையைத் தவிர்த்துவிடுவது நல்லது. இல்லையேல் சில நஷ்டங்களைச் சந்திக்க நேரிடும்.

கலைத்துறையினர்: உடல் அசதி அதிகரித்தது போன்ற உணர்வு ஏற்படும். சஞ்சலத்திற்கு இடம் கொடுக்காமல் தொழிலில் மட்டுமே கவனமாக இருந்தால் பற்பல நன்மைகள் ஏற்படும். வாக்கு ஸ்தானத்தில் குரு உச்சமாக இருப்பதால் நடிப்புத் துறையில் இருப்பவர்கள் பெரும் புகழ் அடைவார்கள்.

பெண்கள்: குடும்பத்தில் உள்ள முதியவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். இதனால் உங்கள் பணிச்சுமை கொஞ்சம் அதிகரிக்கும். மற்றபடி குடும்ப நிலைமை சௌகரியமாகவே இருக்கும்.

மாணவமணிகள்: கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். விளையாட்டு போன்ற கேளிக்கைகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைச் சற்று குறைத்துக் கொண்டால் தலைசிறந்த படிப்பாளியாக உயர்வடைவீர்கள்.

அறிவுரை: விரைவில் உங்களுடைய ஜென்ம ராசியில் சனியின் பிரவேசம் நடக்கப்போகிறது. இதனால் இப்போதிலிருந்தே சேமிப்பை அதிகரித்துக் கொள்ளுங்கள். எனினும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி குருவின் பிரபாவத்தால் தீமைகள் குறைந்து நன்மைகள் அதிகம் நடக்கும்.

(தொடரும்)

# புலிகள் மீதான தடையை ஆஸ்திரேலியா நீக்கவேண்டும்

## அந்நாட்டுப் பிரதமருக்கு விநாயகமூர்த்தி எம்.பி. கடிதம்

கொழும்பு,ஜூன்30

ஆஸ்திரேலியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேணடும். இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றைத் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி அந்நாட்டுப் பிரதமருக்கு அனுப்பி.வைத்துள்ளார். கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் ஊடாக அவர் இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவது இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பெரிதும் உதவும்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசும் விடுதலைப் புலிகளும் மிகுந்த அக்கறையுடன் செயற்படும் இந்த வேளையில், ஆஸ்திரேலிய அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கினால் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் தடையை நீக்குவது குறித்து ஆராயும்.

அதன்மூலம் சமாதானம் விரைவில் கிடைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

- இவ்வாறு அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ம-4)

### வன்னியிலிருந்து வந்த 1000 குடும்பங்கள் தென்மராட்சியில்!

தென்மராட்சி,ஜூன்30

வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருந்த தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளன.

தினமும் பத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பி வருவதாகவும் கடந்த 15 ஆம் திகதிவரை 840 குடும்பங்கள் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்து தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் பதிவு பெற்றுள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை -

கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் தங்கியிருந்த குடும்பங்களும் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### நெதர்லாந்து தூதர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

நெதர்லாந்து தூதுவர் சென் பிளங்கார்ட் கடந்த வியாழன்று கிளிநொச்சி சென்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்செல்வனுடன் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தினார்.

தூதுவருடன் அவரின் உதவியாளரும் சென்றிருந்தார். நோர்வேயின் சமாதான முன்னெடுப்புகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுல் முதலான விடயங்கள் பற்றிப் பேச்சு நடந்தது. (ம)

### மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் வைபவம் நாளை காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இதுவரை மேற்படி வைபவத்துக்கான அழைப்பிதழ்களை பெற்றுக் கொள்ளாத - தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வருகைதந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

# அர்த்தமற்ற ஹர்த்தால்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்

## பள்ளிவாசல்கள் சம்மேளனச் செயலாளர்

"சமூகத்தலைவர்களால் அழைக்கப்படாத எந்த ஹர்த்தாலுக்கும் எதிர்காலத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது. அர்த்தமற்ற ஹர்த்தால்கள் நிறுத்தப்பட வேண்டும்."

- இவ்வாறு அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனச் செயலாளர் ஏ.எச்.எம்.மஜீத் (ஜே.பி.) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் 10 ஹர்த்தால்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றால் கிடைத்த பயன்கள் எதுவுமில்லை. மாறாக அன்றாடம் கூலிவேலை செய்து பிழைப்பவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றார்கள். நாட்டின் பொருளாதாரத்தில் மேலும் ஒரு படி பின்னடைவு ஏற்படுகிறது.

மூதூர் சம்பவத்தையடுத்து வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பிரதேசங்களில் வன்முறை உக்கிரமடைந்து கொலைகளும், கடை எரிப்புகளும் நடந்துள்ளன. இந்த வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் சமூகத் தலைவர்களால் அழைக்கப்படாத எந்த ஹர்த்தாலுக்கும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது. முஸ்லிம்கள் பிரபா - ஹக்கீம் புரிந்துணர்வு ஒப்பந்ததைக் கௌரவிக்க வேண்டும் - இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

குடாநாட்டு விவசாயிகள் பிரச்சினை பற்றி ஆராய

# கமநலத் திணைக்களத்தின் ஆணையாளர் யாழ்.வருகை

யாழ்ப்பாணக்குடாநாட்டு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் அறிந்து கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைக் காணும் நோக்குடனும் கமநல அபிவிருத்திக் திணைக்கள ஆணையாளர் நாயகம் புஸ்ஸேபிட்டிய நான்கு நாள்கள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளருடன் பிரதி ஆணையாளர் நாயகம், மேலதிக ஆணையாளர், சந்தைப்படுத்தும் முகாமையாளர், நிதி ஆலோசகர் ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள பத்து கமநல கேந்திர நிலையங்களுக்கும் இவர்கள் நேரடியாகச் சென்று விவசாயிகளுடன் கலந்தாலோசனை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தை இக்குழுவினர் பார்வையிட்டனர்.

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

விவசாயிகள் சார்பில் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சி.பொ.வ.மா.க.முதலியார், ஆணையாளர் நாயகத்திடம் கையளித்தார்.

இது தொடர்பாக தாம் கமநல அமைச்சரும் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

உடுவில் கமநலகேந்திர நிலையம் சார்பில் மேற்படி குழுவினருக்கு இராப்போசன விருந்தும் வழங்கப்பட்டது. (ம-152)

# தமிழ் மக்கள் விடிவுக்காய் குரல் கொடுத்த யாழ்.ஆயர்

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அண்டகை ஜூலை மாதம் ஆறாம் திகதி 1992ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தின் ஏழாவது ஆயராக திருத் தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் நியமிக்கப்பட்டார்.

### வாழ்க்கை வரலாறு

யாழ். மறைமாவட்ட ஆயராக 10 ஆண்டுகளை இவர் நிறைவு செயகின்ற போதும் ஆயர் பணியில் 21 நீண்ட ஆண்டுகளை அவர் கடந்து விட்டவர்.

> மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். ஆயராகப் பொறுப்பேற்று 10 ஆண்டுகள் நிறைவுறுவதையொட்டி இக் குறிப்பு பிரசுரமாகிறது.

1938இல் பிறந்த இவர், 1963இல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். யாழ் பேராலயம், நல்லூர், பெரிய விளான், நானாட்டான், வங்காலை ஆகிய பணித்தளங்களில் பங்குப் பணிபுரிந்த பின்னர் 1973முதல் 1977 வரை யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி நிலைய இயக்குநராகப் பணி புரிந்தார்.

உரோமாபுரியில் 'உர்பான்' மறை பரப்புப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதி பட்டப்படிப்பை 1981ஆம் ஆண்டுமேற்கொண்டிருந்தபோதே ஆயராகும் அழைப்பும் அறிவிப்பும் இவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலப் பாரம்பரியத்தைக் கொண்ட பல மறைமாவட்டங்களுக்குத் தாயாக விளங்கிய யாழ். மறை மாவட்டத்திலிருந்து மன்னார் மறை மாவட்டம் பிரிக்கப்பட்டபோது அதன முதல் ஆயரான நியமனமே அந்த அழைப்பும் அறிவிப்புமாகும்.

அனைத்தும் நற்செய்திக்காகவே (கொரி.19:23) என்ற விருதுவாக்குடன் 30.07.1981இல் மடுத்திருப்பதியில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 11 ஆண்டுகள் மன்னார் மறைமாவட்ட ஆயராக பணி புரிந்தார். 06.07.1992 முதல் கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.மறைமாவட்ட ஆயர் பணியை சிறப்பாக ஆற்றி வருகிறார்.

மன்னார் மறைமாவட்டத்தில் 11 ஆண்டுகளும் யாழ்.மறைமாவட்டத்தில் 10 ஆண்டுகளுமாக 21ஆண்டுகளை ஆயர் பணியில் நிறைவுசெய்துளள இவர் 2006இல் தமது ஆயர்த்துவ வெள்ளிவிழாவை கொண்டாடுவார்.

### யாழ் வருகை

காரிருளின் மத்தியில் கிளாலிக் கடலலைகளை ஊடறுத்துக்கொண்டு வந்த விரைவுப் படகில் யாழ். நகரின் ஆயன் வந்திறங்கினார். மேள தாளங்களும் மாலை மரியாதைகளும் அங்கிருக்கவில்லை. கூடியிருந்த குருக்கள் கூட்டத்தில் இருளின் நடுவில் இரகசியவரவேற்பொன்று யாருக்கும் தெரியாமல் நடந்தே முடிந்தது. இரவோடிரவாக ஆயரை அழைதது்க் கொண்டு குருக்கள் ஆயர் இல்லம் வந்து சேர்ந்தனர். மாபெரும் மகத்தான வரவேற்பொன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இளைப்பாறிய ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை அண்டகை தலைமையில் சமயத் தலைவர்களும் மற்றும் பிரமுகர்களும் குழுமிநிற்க நிகழ்த்தப்பட்டது.

அப்போது ஆயர் அவர்கள் யாழ. மறைமாவட்டத்தில் தாம் ஆற்றப் போகும் பணியை இரத்தினச்சுருக்கமாக அடுக்கிவைத்தார். 'தமிழ் மக்கள் இலங்கை மண்ணில் நீண்ட காலமாக துன்ப துயரங்களை அனுபவிக்கிறார்கள். அவர்களின் துன்ப துயரங்களுக்கு நீதியோடு கூடிய நிரந்தர தீர்விணைக்காண என்னாலான முழு முயற்சிகளையும் செய்வேன். தமிழ் மக்களின் விடிவிற்காக என்னை முழுமையாக அர்ப்பணித்து பாடுபடுவேன்' - என்று தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தம் மறைமாவட்டப் பணிகள் மத்தியில் முக்கிய இடம் கொடுக்கவிருப்பதை தெளிவாக கோடிட்டுக் காட்டினார்.

இந்த இரண்டு பணிகளையும் கடந்த 10 ஆண்டுகளில் நிறைவு செய்ய யாழ்.ஆயர் முயன்றிருக்கிறார் என்றே கூறவேண்டும். இந்த இரண்டு பணிகளையும் நிறைவேற்றுவதற்கு இலங்கை மண்ணில் நடந்து கொண்டிருந்த கொடிய போர் தடையாக இருந்திருக்கிறது என்றே கூற வேண்டும்.

யாழ்.மறைமாவட்டத்தில் அவர் பணிகளை ஆரம்பித்தபோது ஆரம்பமே மிகவும் சிக்கலானதாக இருந்தது. யாழ்ப்பாணப்பகுதி, இளவாலை மாதகல் பகுதி, தீவுப்பகுதி, கிளி. முல்லை மறைக் கோட்டப் பகுதி எனப் பல பிரிவுகள் யாழ். மறை மாவட்டத்தில் யுத்தத்தின் காரணமாக உருவாக்கப்பட்டிருந்தன. ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்திற்கான தொடர்புகளும் பிரயாணங்களும் தடைப்பட்டிருந்தன. இலகுவில் இந்த இடங்களுக்கு போவது கடினமாகவே இருந்தது. இவ்விடங்களுக்குப் போகமுடியாது என கை கழுவி விட்டிராமல் இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களாக இருந்த இந்த இடங்களுக்கு தமது கடின முயற்சியால் காலத்துக்குக் காலம் சென்று வந்தார்.

**அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை**

படிப்படியாக இப்பிரிவுகள் எல்லாம் அகற்றப்பட்டபோதும் கிளி - முல்லை மறைக்கோட்டம் யாழ்.மறை மாவட்டத்திலிருந்து துண்டிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகவே இருந்தது. ஆயினும் ஆயர் அடிக்கடி கிளி - முல்லை மறைக்கோட்டத்தை தரிசித்து குருக்களையும், பொது நிலையினரையும் வாழ்வில் உறுதிப்படுத்தினார்.

இவை ஒருபுறமிருக்க பங்குகள் பல இடம்பெயர்ந்துபோயிருந்தன. பல பங்குகள் போரினால் மூடப்பட்டிருந்தன. பங்குத்தந்தையர் பலர் பங்கையும் பங்குமக்களையும் விட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். கிறீஸ்தவ கடமைகளை நிறைவேற்றுவது கடினமாக இருந்தது. இந்நிலையில் பங்குப் பராமரிப்பும் ஆன்மீக தேடல்களுக்கான தேவைகளும், உதவிகளும் மிகவும் தேவைப்பட்டன. அவ்வேளை தம்மால் இயன்றவரை அவற்றை வழங்க அனைத்து ஆக்கப்பணிகளையும் மேற்கொண்டார்.

யாழ்.மறைமாவட்டம் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாரிய இடப்பெயர்வை சந்தித்தபோது பரிதவித்து ஒரு வழியுமற்று இருந்த மகளனைவரும் யாழ். மண்ணைவிட்டு இடம்பெயரும்வரை அவர்களுக்கு பக்கத் துணையாக, இடம்பெயராது ஆயர் இல்லத்தில் இருந்தார். பின்னர் மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்தபோது மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து அவர்களின் துன்பத்தில் பங்கெடுத்துக் கொண்டார். அவ்விடம்பெயர் அனுபவங்கள்



மத்தியிலும் சமயப் பணிகள் தங்குதடையின்றி நடைபெற குருக்களுக்கும் பொது நிலையினருக்கும் துணைபுரிந்தார்.

இடபபெயர்வு அனுபவங்கள் முடிவுற்று மக்கள் யாழ். நகருக்கு திரும்பியவேளை யாழ் நகர ஆலயங்களையும் பங்குப் பணிமனைகளையும் ஸ்திரப்படுத்தத் தொடங்கினார்.

இப்போதுதான் யாழ்.மறைமாவட்டம் முழுமையாக பிரிவுகளின்றி ஒரு குடையின்கீழ் வந்துள்ளது. இப்போதுதான் யுத்தமேகங்கள் நீங்கி சுதந்திரக் காற்றை மக்கள் சுவாசிக்கக் தொடங்கியுள்ளார்கள் இனிவரும காலத்தில் யாழ். மறை மாவட்டத்தில ஆயரின் தரிசனப்பார்வை மக்களையும் குருக்களையும் ஒன்றிணைப்பதாயும் இவர்கள் பணிகளை ஒருமுகப்படுத்துவதாயும் அமையுமென எதிர்பார்க்கலாம்.

தமது பத்தாண்டு கால யாழ். ஆயர் பணியில் பல தடவைகள் இலங்கைநாட்டின் ஜனாதிபதியையும் பிரதமரையும் தனியாகவும் குழுவாகவும் சந்தித்து தமிழ் மக்கள் பிரச்சினையை எடுத்துக்கூறி மனிதாபிமான ரீதியில் தீர்த்துவைக்கும்படி தொடர் அழுத்தம் கொடுத்துக் கொண்டே வந்தார். பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க இவ்வாண்டின் முற்பகுதியில் யாழ்.ஆயர் இல்லத்திற்கு வந்தபோது யாழ் ஆயர் பல தடவைகள் தம்மை சந்தித்தாகவும் தமிழ் மக்கள் பிரச்சினையை முதல் பிரச்சினையாகக் கருதி தீர்த்து வைக்கும்படி எம்மிடம் வேண்டியுள்ளதாகவும் கூறியமையே இங்கு சான்றுகளாகும்.

தமது தொடர் கடிதங்களாலும் அறிக்கைகளாலும், செய்திகளாலும் மக்கள் பிரச்சினையை முதன்மைப் படுத்தி அப்பிரச்சினையை எப்போதுமே முன்னுரிமைப்படுத்திக் கொண்டிருந்தவர் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

ஆய்ருடைய அரசியல் நிலைப்பாட்டையும், அணுகுமுறையையும் கத்தோலிக்க மக்கள் மட்டுமல்ல இந்துசமய மக்களும் முழுமையாக ஏற்றிருக்கிறார்கள். தமது முழுமையான ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவரின் குரல் தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய ஒரு நிரந்தர தீர்வு ஏற்படும்வரை ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கவேண்டும். அவர் நீடூழிவாழவும் அவரின் பணி சிறக்கவும் இறைவரம் வேண்டுவோம். ★

---

# மக்கள் முகம்



புத்தூர் கிழக்கைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னத்துரை யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாகச் சேவையாற்றி உதவி அஞ்சல் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்று இளைப்பாறியுள்ள இவர், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

(ஐ-173)

☆ ☆ ☆



வீரசிங்கம் யோகரட்ணம் சமாதான நீதிவானாக நியமம் பெற்றுள்ளார். இவர் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இல.91, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது இல.10, மன்சன் பிளேஸ், நீர்கொழும்பில் வசிப்பவருமாவார்.

இவர் உள்ளூராட்சி நிர்வாக சேவையைச் சேர்ந்த வரும் கொக்குவில் உப அலுவலகம், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி ஆகியவற்றில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகவும் விசேட ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் வடக்கு - கிழக்கு மாகாண ஓய்வூதியர் சம்மேளனத்தின் பிரதிநிதியும், நீர்கொழும்பிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை இல்லத்தின் நிர்வாகஸ்தரும் சமூக சேவையாளரும் வெலிஹேனவில் உள்ள அநாதைப் பிள்ளைகள் இல்லத்திற்கான உதவியாளருமாவார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பிரபல உதைபந்தாட்ட வீரருமாவார். (ஐ)

☆ ☆ ☆



எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த இராசையா தெய்வேந்திரம்பிள்ளை யாழ்.நீதி நிர்வாக மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு கடந்த 13ஆம் திகதி யாழ்.மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக நூலக கவனிப்பாளராக கடமையாற்றும் இவர் எழுதுமட்டு வாழ் சீ.சீ.ரி.எம். பாடசாலை, உசன் இராமநாதன் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுதுமட்டுவாழ் கிளையின் தலைவராகவும், தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும், சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய இயக்குநர் சபை உறுப்பினராகவும் உள்ளார்.

(ஐ-117)

☆ ☆ ☆



யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரையாளர் புண்ணியமூர்த்தி ரவிராஜன்கலாநிதிப்பட்டத்துக்கான பொதுநலவாய புலமைப்பரிசில் பெற்று தமது இல்லத்தரசி யுடன் லண்டன் பயணமானார்.

இவர் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான சிறப்புப் பட்டதாரியும் பேராதனைப் பல்கலைக்கழக முதுவிஞ்ஞான சிறப்புப் பட்டதாரியுமாவார். ரவிராஜன், மாதகல் இளைப்பாறிய தபாலதிபர் கந்தையா புண்ணியமூர்த்தி மனோரஞ்சிதம் ஆகியோரின் புதல்வராவார்.

(ஐ)

---

# பதவிகளுக்கு பெருமை சேர்த்த கல்வியாளன் பஞ்சலிங்கம்

> கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தினர், அக்கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.பஞ்சலிங்கத்துக்கு இன்று கொழும்பில் பாராட்டுவிழா நடத்துகின்றனர். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.



திரு.ஏ.பஞ்சலிங்கம் கொக்குவில் இந்துவின் நன்மாணாக்கனாய், நல்லாசானாய், பிரதி அதிபராய், அதிபராய் பல்வேறு பரிணாமங்கள் பதித்து வந்த சுவடுகள் உள்ளும்தோறும் உவகை அளிப்பவை. தான் கடந்து வந்த பாதையில் வகித்த பதவிகள் அனைத்திலும், தனக்கே உரிய தனி முத்திரையைப் பதித்தமை மட்டுமன்றி, தான் சார்ந்த துறைக்கும் பெருமை தேடித்தந்துள்ளார்.

: இவர் கொக்குவில் இந்துக்கல்லூரியில் இணைந்த காலம் முதல், தன்னை முற்றுமுழுதாகக் கல்லூரியோடு சங்கமமாக்கி பல்வேறுபட்ட நிலைகளில் பணிபுரிந்தார். கல்லூரி அன்னையைத் தாயினும் மேலாக நேசிக்கும் இவர், கொக்குவில் இந்துக் கல்லூரியை ஒரு முதலாம் தரப பாடசாலையாக உயர்த்த எண்ணி அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது உழைத்தார்.

இன்று அக்கல்லூரி, யாழ்.மண்ணிலே தனக்கென ஒரு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு, ஒரு முதலாம் தரப்பாடசாலையாகத் திகழ்கிறதென்று சொன்னால் அதில் முக்கிய பங்கு திரு.பஞ்சலிங்கம் அவர்களுக்கு உரியது.

எந்தச் சந்தர்ப்பதிலும் சலனமற்ற அமைதி, உணர்ச்சிகளின் கொந்தளிப்புக்கு இடம்கொடுக்காத ஆழம்... அனைவரது ஆலோசனைகளையும் மறுப்பின்றிக் கேட்டாலும் இறுதியில் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் ஆற்றல், எண்ணிய எண்ணியாங்கு கருமமாற்றும் செயற்றிறன்; என்று இவரது தனித்துவத்தை வர்ணிக்க வார்த்தைகளில்லை.

பஞ்சலிங்கம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியினதும், யாழ்.இந்துக் கல்லூரியினதும் மைந்தர்களைத் தன் ஆளுமையின் கீழ் நல்வழி நடத்தி மேனிலைப்படுத்த, ஏணிப்படியாக நின்றுழைத்த பெருந்தகையாளர். கொக்குவில் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக அரும்பணியாற்றி வரும்

**இ.செல்வநாயகம்**
*செயலாளர்,*
*பழைய மாணவர்சங்கம்,*
*கொக்குவில் இந்துக்கல்லூரி.*

இவர் தொடர்ந்து மூன்று வருடங்கள் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது மட்டுமன்றி, கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள் இவரது ஆலோசனையில் இடம்பெறுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

இவர் யாழ்.றோட்டறிக் கழகத்தின் தலைவராகத் திகழ்ந்தது மட்டுமன்றி, கழகச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கெடுத்து வருகிறார். சமூக சேவையே தன் வாழ்வெனக் கொண்டு நலிந்து நொந்திருக்கும் மக்களுக்கு ஆற்றும் சேவையில் மனநிறைவு கொள்பவர்.

*"சமன் செய்து சீதூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பால் கோடாமை ஆன்றோர்க் கழகு"* என்ற பொய்யா மொழிக்கிணங்க நடுநிலை தவறா நன்னெறியாளனாகிய இவரை ஒரு நடுநிலையாளனாகக் கருதுதல் சாலப் பொருந்தும். ★

---

# "கரைதேடும் ஓடங்கள்" நாடக விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்30

யாழ்.குடாநாட்டிலுள்ள கலைஞர்களுடனான சந்திப்பும் நாடக சந்திப்பும் நாடக விமர்சன அரங்கும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடக வியலாளர்கள், நடிகர்கள் பல்வேறு துறை சார்ந்த இலக்கியப் படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

கலைஞர் சந்திப்பைத் தொடர்ந்து வன்னியிலிருந்து வருகைதந்துள்ள 'சமாதான கலாசார விடுதலைப் பறவைகள்' குழுவின் புதுவை அன்பனின் நெறியாழ்கையில் உருவான "கரை தேடும் ஓடங்கள்" நாடக விமர்சன அரங்கு இடம்பெறும்.

விடுதலைப் போராட்டத்தின் அவலங்களைச் சித்திரிக்கும் இந்த நாடகம் கடந்த ஒரு மாத காலமாக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டு பெருமளவான மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ம-4)

## கல்லூரிதினமும் பரிசளிப்பும்

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரிதினமும் பரிசளிப்பு விழாவும இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறுகின்றன.

கல்லூரி அதிபர் துரை எங்கரசு தலைமையில் சரஸ்வதி கலையரங்கத்தில் நடைபெற உள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா கலந்து கொள்கிறார். பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் ஆசியுரை வழங்குவார்.

சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் த.தேவராஜா, கன்னாதிட்டி மக்கள்வங்கி முகாமையாளர் அ.குகதாசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஒ-152)